ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. —ஸ்ரீ வீரராகவ கவி.


| மலர் 18 | விஷு ஆனி மீ ஜுலை 1941 | இதழ் 7 |
|---|---|---|


ஆனந்த பைரவி

பல்லவி

இவர் யாரோ?—இன்னாரென்றறியேன்!

அனுபல்லவி

மனக்கதவைத் திறந்து—மாதவன்போல் வந்த (இவர்)

சரணம்

(1) மாவலி வேள்வியில்—மாண் குறளாய் வந்த
கோவலனார் இவர் தாமோ? (இவர்)

(2) தாயுரைகேட்டுத் தாரணியைத் துறந்த
நேயர் ராகவனார் இவர் தாமோ? (இவர்)

(3) நங்கையர் உள்ளமுடன் நவநீதமுங் கவர்ந்த
பங்கயக் கண்ணன் இவர்தாமோ?
...ந்தருள் ஈசன் இவர்தாமோ?

---

## கருத்துரை

[...வது பக்கத்திலுள்ள பாட்டு.]

...ப் போன்ற நேத்திரங்களையுடைய பரந்தாமா!
...விட வே... கதி இல்லை என்று உன்னுடைய சரணா...
...ண்ணப்பித்துக்கொள்கிறேன். மன்னவர்
...முறையிட்ட த்ரௌபதியின் மானத்
...! ஹே கருடவாகன!
... எனக்கு...

# க்ஷேமலாபங்கள்

183055

நேயர்களே!

நம் மோகினிச்செல்வியின் சென்ற இதழில் ஆரம்பமான 'தயாநிதி' என்கிற கதை பல அன்பர்களின் ப்ரேமைக்குப் பாத்திரமாகியதாயும், அதனால் தம்தம் சினேகிதர்களைச் சேர்த்துக்கொடுத்திருப்பதாயும் கடிதம் எழுதிப் புதிய நேயர்களின் பணத்தையும் அனுப்பியிருக்கிறார்கள். இதேபோல் பல ஏஜண்டுகளும் அதிகமான ப்ரதிகளுக்கு ஆர்டர் செய்திருக்கிறார்கள். இவ்விரண்டுவிதமான கடிகளும் நமக்குப் பெருமகிழ்ச்சியைக் கொடுக்கின்றன. மேற்குறித்தவர்களுக்கு எமது இதய பூர்வமான நன்றியுடன்கூடிய வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

சென்ற இதழ் க்ஷேமலாபங்களில் முக்கியமான சில கடிதங்களுக்குப் பதில் எழுதியதைப் பார்த்த சில சகோதர சகோதரிகள் "எங்கள் கடிதங்களுக்குப்பதில் ஏன் க்ஷேமலாபத்தில் எழுதவில்லை" என்று எழுதியிருக்கிறார்கள். "நீங்கள் எப்படி கதை எழுதுகிறீர்கள்? சிறுகதை எப்படி எப்படி எழுதுவது? கட்டுரை எப்படி எழுதுவது? உங்களுக்குக் கதை எழுதுவதில் லாபம் எவ்வளவு வரும்? உங்கள் சொந்த ஊர் எது? உங்களுக்கு எத்தனை குழந்தைகள்? உங்களுக்கு என்ன வயது? இம்முறை நீங்கள் ஏன் ஜெயிலுக்குப் போகவில்லை. உங்கள் பத்திரிகைக்கு எத்தனை சந்தாதாரர்கள்? உங்கள் புகைப்படம் ஏன் மோகினியில் போடுவதில்லை? உங்களுக்கு ஹிந்தி தெரியுமா!" என்றவைபோல் யோகக்ஷேமங்களை விசாரித்து எழுதும் கடிதங்களுக்கு க்ஷேமலாபத்தில் என்ன பதில் எழுதுவது? பொதுவான விஷயங்களுக்கு சஞ்சிகை மூலமாகவும், மற்றவற்றிற்கு நேரிலும் பதில் எழுதுகிறேன்.

## நன்றியறிதலும் வேண்டுகோளும்

நிற்க, நமது மோகினியின்பால் பேரன்புகொண்டு பலநண்பர்கள் முக்கியமாக வெளிநாட்டிலுள்ளவர்கள் தம் தம் நண்பர்களைச் சேர்த்துக்கொடுத்து உதவுவதற்கும், நம் ஏஜண்டுகளில் பெரும்பாலோர் வெகு சிரத்தையுடன் வேலை செய்வதற்கும் எங்கள் மனப்பூர்வமான வந்தனத்தையும் நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்வதோடு ஒரு வேண்டுகோளையும் விடுக்கிறோம். அதாவது, தற்போது உலகமிருக்கும் நிலைமையில் பத்திரிகைத் தொழில் நடப்பதே அனேக இடங்களில் சிரமமாகவிருக்கின்றது. ஒன்றுக்கு எட்டு பங்கு விலை கொடுத்தாலும் காகிதம் கிடைப்பதே துர்லபமாகவிருக்கின்றது. இந்த சங்கடத்தினால் சில பத்திரிகைகள் நிறுத்தப்பட்டதையும், சிலபத்திரிகைகள் பக்கங்களைக் குறைத்தும், அதிக விலைக்கு விற்பதையும் எல்லோரும் அறிந்திருக்கலாம். இச்சமயத்தில் நமது மோகினியின் சந்தாநேயர் ஒவ்வொருவரும் தங்கள் நேயர்களைச் சந்தாதாரராகச்சேர்த்தும், ஏஜண்டுகள் விற்பனையை இன்னும் அதிகரிக்கச்செய்தும் நமக்குப் பேருதவி அளிக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

## பேபர் பஞ்சம்—சிக்கனம்

இன்னொரு முக்கிய விஷயம். இந்த இதழ்முதல் நமது மோகினியில் வெளியாகும் பக்கங்களில் கதையின் பாகத்தில் மட்டும் 4 பக்கங்கள் குறைந்திருப்பதைக்கண்டு நேயர்கள் ஒரு குறையாக நினைக்கலாம். காகிதம் கிடைப்பதே அரிதாயுள்ள இக் காலத்தில் வாசகர்களுக்குக் கதையிலும், நமக்குக் காகிதத்திலும் நஷ்டமின்றி இந்த ஒரு சிறிய மாறுதலைச் சிக்கனத்திற்காகச் செய் திருக்கிறோம். முன்பு 40 பக்கங்களில் பக்கத்துக்கு 35 வரிகள் வீதம் 1400 வரிகள் வெளியாயின. இப்போது 36 பக்கத்துக்கு 40 வரிகள் வீதம் 1440 வரிகள் வெளியாகின்றன. ஆகையால் மொத் தத்தில் 40 வரிகள் அதிகமேயன்றிக் கதையில் குறையவில்லையென் பதைக் கவனிக்கக் கோருகிறோம். இதை தயவு செய்து ஒவ்வொரு வரும் படிக்க வேண்டுகிறேன். படிக்காமல் குறைவாகவிருக்கிற தென்று நினைத்து எழுதிவிடாதிருக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

## தாமதத்திற்கு நாம் காரணமல்ல

சில ஊர்களில் ஏஜண்டுகள்மூலமாக சஞ்சிகையை வாங்கும் நேயர்கள் "ஏன் உங்கள் பத்திரிகை வெகு தாமதமாகக் கிடைக் கிறது?" என்று எழுதுகிறார்கள். சில ஏஜண்டுகள் பணத்தைக் குறித்த காலத்தில் ஒழுங்காக அனுப்பாததனாலேயே நாம் சஞ்சி கையை அனுப்பத் தாமதமாகிறது. அப்படி சஞ்சிகை குறித்த காலத்தில் கிடைக்காதவர்கள் நமக்கு நேரில் சந்தாவை அனுப்பினால் முதல் தேதியன்று சஞ்சிகை யனுப்பிவிடுகிறோம்.

இன்னும் சில முக்கியமான கடிதங்கள் வந்திருப்பதற்கு அடுத்த இதழில் பதில் எழுதுகிறேன்.

## உங்கள் ஊரில்

எமக்கு ஏஜண்டு இல்லையாயின் தயவுசெய்து செல்வாக்குள்ள நியூஸ் ஏஜண்டின் விலாசத்தை நமக்குத் தெரிவித்தோ அல்லது அவர்களை நமக்கு எழுதச் செய்தோ உதவிபுரியக் கோருகிறோம்.

## நேயர்களின் பேராவல்

"அம்மணி! நித்யாவை அந்த கிழவனுக்கா மனந்துணிந்து தள்ளி விடப்போகிறீர்கள்? அந்த கிழவன் தாலியை வைத்துக்கொண்டு நிற்பதைப் பார்த்தால் பகீரென்கிறதே!...அவன் தாலியைக் கட்டுவ தற்குள் மயக்கம் போட்டு விழுந்துவிடுவானோ?...கோபுவின் ஆவ லுக்கு நித்யா பாத்திரமாவாளா?" என்றெல்லாம் கடிதம் எழுதுகி றார்கள். அவர்களின் ஆவலைக்காண என் இதயம் ஆனந்தத்தினால் மலர்கிறது. இக்கடிதங்களுக்கு பதில் தொடர்ச்சியாகப் பத்திரி கையைப்படித்து பார்க்கும்படி வேண்டுகிறேன்.

நன்றியுள்ள,

வை. மு. கோதைநாயகி.




# பேசுவதில் சமத்காரம் வேண்டும்

கல்:—என்ன மங்களம் சிரித்துக் கொண்டே வருகிறாய். ஏதாவது விசேஷம் உண்டா!

மங்:—சிரிப்பதற்கு என்ன விசேஷம் வேண்டும்? ஒருவர் தடுக்கி விழுந்தாலும் சிரிக்கிறோம்; அசட்டுப்பிசட்டென்று பேசினாலும் சிரிக்கிறோம். அபஸ்வரமாய் பாடினாலும் சிரிக்கிறோம்?

சும:—அம்மாதிரி யார் என்ன செய்தார்கள்.

மங்:—இப்போது நான் வரும் போது தெரிந்தவள் ஒருத்தி தன் வீட்டு வாசலில் நின்றிருந்தாள். வேலை மெனக்கெட்டு என்னைக் கூப்பிட்டு, "என் மங்களம்! நீ மட்டும் உன் மகளுக்கு இத்தனை அழகாக விதவிதமாய் கவுன்களும் சொக்காய்களும் தைத்துப் போடுகிறாயே! இந்த புதியமாதிரிகளைப் பார்த்தால் எனக்கு ஆசையாயிருக்கிறது. எனக்குக் கொஞ்சம் தைத்துத் தரக் கூடாதா! நான் வேண்டுமானால் கூலி கூடக் கொடுத்துவிடுகிறேன்" என்று அசட்டுத்தனம் வழியக் கேட்டாள். இது சமத்காரமான வார்த்தையா! கொழுப்புப் பிடித்த வார்த்தையா! கூலி கொடுப்பதற்கு இவள்தான் மகராஜியா!...எனக்குக் கோபம் வந்தது. "இன்னும் கூலி வாங்கித் தைத்துப் பிழைக்கும் காலம் வரவில்லை. அப்படி வந்துவிட்டால் முதன் முதல் உன்னிடமே கூலி வாங்குகிறேன்' என்று சொல்லிக் கொண்டே வந்தேன். அவள் பேசியதை நினைத்துத்தான் சிரித்தேன்.

சாவித்:—பேஷ்! நன்றாகச்சொன்னாய். 'இந்த மாதிரிகள் வேண்டுமானால் ஒரு கவுனை மாதிரிக்குக் காட்டுகிறாயா, எங்கள் தையல்காரனிடம் தைக்கிறேன்' என்று சொல்லியிருக்கக்கூடாதா! அல்லது சகஜபாவத்தில் 'ஒரு அழகானமாதிரி எனக்கும் தைத்து தருகிறாயா! அதைப்பார்த்து நான் கற்றுக்கொள்கிறேன்' என்று கேட்கக்கூடாதா! இது வேண்டுமென்று கேட்ட கேள்விதான். இப்படிப்பட்டவர்களுக்கு மாதிரிக்குக் கூட கொடுக்கக்கூடாது.

இந்து:—ஐயோ, ராமா! இதற்கு என்னமோ ஆச்சரியப்படுகிறீர்களே! நான் ஒரு கல்யாணத்திற்குப் போயிருந்தேன். அங்கு வந்திருந்த புண்யவதி ஒருத்தி என்னுடைய நகைகளையெல்லாம் பார்த்துவிட்டு "இது வெகு அழகாயிருக்கிறது. இதை எனக்குக் கழட்டிக் கொடுத்துவிடு. நான் பணத்தைக் கொடுக்கிறேன். நீ செய்து கொள்ளு" என்று உடம்பில் மங்களகரமாகவிருக்கும் நகையைப்பார்த்துக் கேட்டாள். இது எப்படியிருக்கிறது நீங்களே சொல்லுங்கள். எதடா! உடம்பில் அலங்காரமாயிருப்பதை வெடுக்கென்று கேட்கிறோமே அவர்கள் என்ன நினைப்பார்கள். இது எந்த கல்யாண சந்தர்ப்பத்தில் செய்ததோ! என்று யோசித்தாளா! மாதிரி பார்த்துச் செய்துகொள்வதுதானே! பேசத் தெரிந்த லக்ஷணம் இவ்வளவுதான்.

பானு:—பேசத்தெரிந்த லக்ஷணங்களில் இதுவே தேவலையே! இன்னும் சிலர் பேசுவதைப் பாருங்களேன். பொதுவாக சில சில வார்த்தைகள் பகுவசனமாகவே நம் பழக்க வழக்கத்தில் வழங்கிவருகின்றன. அதாவது, உதாரணம் சொல்கிறேன் பாருங்கள். 'நம்ம வீட்டில் கல்

யாணம். நாம்பள். நம் குழந்தை. நமக்கென்ன புத்தியில்லையா! நாம் அறியாத விஷயமா! நாம் அப்படியா ஏமாறுவோம். நாம் செய்யமுடியாதா? இதுபோல் பலவார்த்தைகள் சகஜமாக உலாவுகின்றன. இவைகளாவது பரவாயில்லை. இதே பகுவசனத்தைச் சிலர் துக்கம் வந்திருக்கும் சமயம், "நாம் செய்த பாவம். நாம் கொடுத்துவைத்தது இது" என்று சொல்கிறார்களே, அது எத்தனை • அசம்பாவிதமாயிருக்கிறது பாரு. அவர்கள் தலைவிதி துக்கம் வந்தால், கடன் வந்தால், மனஸ்தாபம், த்வேஷம்முதலியனவந்தால் அதைப்பற்றி அனுதாபத்துடன் விசாரிக்கும் மனிதர்களையும் இச்சங்கடங்களில் சேர்த்து இழுத்துக் கொண்டு 'நாம், நாம்' என்றால் எனக்குப் பிடிக்கவில்லை.

காவேரி:—வாஸ்தவம். நான்கூட இதைப்பற்றி நினைத்திருக்கிறேன். என் சினேகிதைக்கு தாயார் இறந்துவிட்டாள். அவளை விசாரிப்பதற்குப் போனேன். அதற்கவள் விசனத்துடன், "உம். நம் தலைவிதி இது. தாயில்லாது தவிக்கும்படியாகிவிட்டது. நாம் செய்த பாவம்"...என்று கூறும்போது எனக்குச்சுறுக்கென்று பொத்தியது. என் தாயார் நன்றாயிருக்கவேண்டுமே. நம்விதி என்று பாடுகிறாளே என்றுதான் தோன்றியது.

சுமதி:—நல்ல வேளை தாயாருக்காவது ஏதோ ஒருமாதிரி தேறலாம். விகல்பமான சாவாகவிருந்தால் ராம ராமா! இம்மாதிரி விஷயங்களில் என்பாவம். என்விதி என்று அழுவது தானே! பிறரையும் இழுப்பானே!

கோதா:—இன்னொரு வேடிக்கை பாருங்கள். நான் முன்பு சத்யாக்கிரக இயக்கத்தில் சிறைச்சாலையில் இருந்தபோது அனேக பெண்மணிகள் கூட இருந்தார்கள். அவரவர்களின் மக்கள் மனிதர்கள்வந்து இண்டர்வ்யூ பார்த்துப்போனதும் 'யார் வந்திருந்தார்கள்?' என்றுவிசாரிப்போம். அதில் ஒரு பெண், 'இன்னிக்கு நம்ப கொளந்தெயே அயச்சினு நம்ப தகப்பனார் வந்தாரு" என்று ஒருநாள் சொன்னாள்.

மற்றொரு முறை வந்தபோது கேட்டதற்கு அதே பெண், "இன்னிக்கு நம்ப புருஷன் வந்து பாத்தாரு" என்றாள். இதைக்கேட்டதும் எனக்கு கலகலவென்று சிரிப்புவந்துவிட்டது. நான் சிரித்ததும் அர்த்தம் தெரியாமலேயே சிலர் கூடச் சிரித்தார்கள். சிலர் பேந்தப்பேந்த விழித்தார்கள். 'ஏன் இப்படிசிரிக்கிறீர்கள்?' என்று சிலர் கேட்டார்கள். 'இந்தம்மாளுக்குமட்டும் புருஷனா? நமக்கும் புருஷனா?...நம்ப புருஷன் வந்தாரு என்று சொல்றாளே..."இனிமேல் அப்படிச் சொல்லாதே...என் எஜமானர் வந்தார்" என்று சொல்லு. என்று நான் கூறியதற்கு எல்லோரும் சிரித்த சிரிப்பு அடங்கப் பத்து நிமிஷமாயிற்று.

மங்:—எங்க பாட்டி ஒரு கதை சொல்வாள். அது ஞாபகத்துக்கு வருகிறது. ஒருவனுக்குத் தாயார் இறந்ததற்கு மற்றொருவன், "உனக்கு மட்டுமா தாயாராயிருந்தாள்? ஊருக்கெல்லாம் தாயாகவிருந்தாள்' என்று உபசாரம் சொன்னானும். அதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு அசடு பின்னொரு சமயம் அவனுக்குச் சினேகிதன் மனைவி இறந்துவிட்டபோது எல்லோருக்கும் இப்படித்தான் உபசாரம் சொல்லவேண்டுமாக்கும் என்று எண்ணி, "உம். உனக்கு மட்டுமா மனைவியாக விருந்தாள். ஊருக்கெல்லாம் மனைவியாயிருந்தாள்" என்று ஆரம்பித்தானும்; கன்னம் இரண்டும் அடுத்த நிமிடமே வீங்கியதாம். இதுபோலத்தானிருக்கிறது. எதெதற்குச் சேர்த்து பன்மையாகச் சொல்லவேண்டும் என்பது இல்லையா? அவ்வளவு தூரம் யோசித்து யார்பேசுகிறார்கள்? பேசு

வதற்கும் சாமர்த்தியமும், சமத்காரமும் வேண்டாமா !

இந்:—கட்டாயம் வேண்டும். அழகாகப் பேசினுல் இன்றெல்லாம் பேச்சையே கேட்டுக்கொண்டிருக்கலாமே. எதெதற்கு பன்மை, எதெதற்கு ஒருமை என்று தெரியவேண்டாமா? ஒரு தேசம், ஒரு கிராமம், கோயில், குளம், ஜாதி இப்படிப் பட்டவைகளைப் பற்றிப் பேசும் போது நம் தேசம் சீர்ப்படவேண்டாமா ? நம் நாட்டில் அடிமை நீங்கி சுதந்திரம் நிலவவேண்டாமா ? நம் ஊர் அழகாக இருக்கவேண்டும். நம் கோயில், நம் குளம், நம் ஜாதி கட்டுப்பாடு, நம் ஜாதிப் பழக்கம், நம் தாய்ப் பாஷையின் அருமை, நம்முடைய மதம்...முதலிய விஷயங்களில் பன்மையாகப் பேசினுல் அழகாக இருக்கும். ஒருத்தி துக்கப் பட்டதற்கு மற்றொருத்தியையும் சேர்த்துக்கொண்டு "நம் கையும், கண்ணும் செய்தபாவம். நாம்பண்ண கர்மம்" என்று பேசினுல் கேட்பவளுக்கு எப்படி இருக்கும் ?

கல்:—நீ சொல்வது ரொம்பசரி, பொதுவாக உள்ள எந்த விஷயத்தையும் பன்மையாகப் பேசலாம். தனிப்பட்ட விஷயங்களை ஜாக்ரதையாய்த்தான் சொல்லவேண்டும். இன்னும் சிலர் பேசும் அழகைப்பாரு. "மாமியார் என்கிற ஒருத்தி இருப்பதே தலைநோவு...தலை வேதனை. ந்யூஸன்ஸ்" என்று சமத்காரமாகச் சொல்வதுபோல் எண்ணிப் பேசுகிறார்கள். தானும் மாமியார் பட்டத்திற்கு வரப்போகிறவள்தானேஎன்று கூட எண்ணுவதில்லை. இம்மாதிரி சொல்லியதை தன் மகளுடைய மாமியார் கேட்டால் அதனுல் தன் மகளுக்குத்தானே உபத்திரவமென்று கூட நினைப்பதில்லை. இப்படி அசட்டுத்தனமாகப் பேசும் பேச்சுக்கள் அனந்தம் இருக்கின்றன.

மங்.—சிலர் கல்யாணத்திற்கு அழைக்கும் அழகைப்பாரேன் 'நீ அவசியம் பாட்டுப் பாடுவதற்கு வரவேண்டும். அதுக்காகவே முக்கியமாகக் கூப்பிடுகிறேன்' என்கிறார்கள் பாடுவதற்கு இவர்களென்ன தொழிலாளியா! ஏதோ வந்த இடத்தில் மரியாதையாக இரண்டு பாட்டு பாடும்படிச்சொன்னல் பரவாயில்லை. பாடுவதற்காகவே நீ வா! என்றால் கட்டாயமாய் அவர்கள் வீட்டிற்குப் போகவேண்டாம் என்று தோன்றி விடுகிறது.

இந்:—இன்னும் சிலர் சமத்தைப் பாரு...'ஏதோ இந்த பக்கம்வந்தேன், அப்படியே அழைத்துவிடலாமென்று நுழைந்தேன்'...என்கிறார்கள். இந்த பக்கம் வராவிட்டால் அழைப்பதும் ஸைபர்தானே என்னமோ ?...

பானு:—இதுவே தேவலையே! இன்னொரு கல்யாண வீட்டில் எஜமானியம்மாள்...'5 ஆயிரம் ஜிலேபியும், லட்டும் செய்தேன். வந்த பீடைகள் எல்லாம் வயிற்றை அறுத்துக்கொண்டுபோய்விட்டது' என்று வெடுக்கென்று என்னிடமே சொன்னாள். இதைவிட முட்டாள்தனம் வேறு என்னவேண்டும்? எல்லோரையும் வீடுவீடாய் எறிக்கூப்பிடுவானேன், பிறகு இப்படி சொல்வானேன். இந்த வார்த்தை,வந்தவர்கள் காதில்பட்டா இனிமேல் அழைத்தால் வருவார்களா ! இந்த வார்த்தையை சமத்தென்பதா! திமிர்பிடித்ததென்பதா!

ஸாவி:—அந்தம்மாளுக்கு ஆயிரமென்றால் ஒரு நிதானமே தெரியாது போல் இருக்கிறது. இதெல்லாம் வெறும் வரட்டு ஜம்பத்தில் சேர்ந்ததுதான். இத்தகைய வரட்டு ஜம்பமுடையவர்கள் தான் செய்வதையே பிரமாதமாகப் பேசுவார்களேயன்றி பிறர் இவர்களைவிட ஆயிரம் பங்கு அதிகமான விமரிசையுடன் செய்தால் அவர்கள் வாயால் கொண்டாடவேமாட்டார்கள்.




1. சில மனிதர்களின் சுபாவமே விசித்திரமானதாயிருக்கிறது. பிறர் வீட்டில் செய்துகொண்டுவந்த சாப்பாட்டைத் தம் வீட்டில் கண்டும், காணாமலும் விலாப்புடைக்கத்தின்னலாமாம்; ஆனால் நேரில் அவர்கள் வீட்டில் போய் சாப்பிடக்கூடாதாம். இந்த ஆசாரத்தை ஆசாரமென்பதா! புனைசுருட்டு பித்தலாட்டம் என்பதா? வேண்டுமென்று கொழுப்புபிடித்துச் சொல்வதாக நினைப்பதா?

2. கம்பீரமாகவும், விமரிசையாகவும் செய்யும் கல்யாணங்களைக் கண்ணாலேயே பார்க்காத சில ப்ரக்ருதிகள் புதிதாகப் பார்க்கும்போது உண்மையில் ப்ரமிப்பு உண்டாகிறது. எனினும் தமது சொந்த சுபாவத்தின் போக்கில் இந்த ப்ரமிப்பை மறைத்து அலக்ஷியபாவத்தையே காட்டி "உம். இது தானா?...இவ்வளவுதானா?" என்று கூசாமல் சிலர் சொல்லுகிறார்கள். இவர்களுக்கு மனச்சாக்ஷி என்பதுகூட இல்லைபோலிருக்கிறது.

3. 'சுய காரியத்திற்கு வஞ்சனை இல்லை. சுவாமி காரியம் மழ மழ' என்பது ஒரு பழமொழி. அதை நிரூபித்துக்காட்டும் ப்ரக்ருதிகள் உலகில் ப்ரத்யக்ஷமாயிருக்கின்றன. தன் மக்கள், தன் மனிதர்களுக்கு வயிறு புடைக்கத் தின்னமுடியாது தீனியை அடைப்பதும், வேண்டி வேண்டி உபசாரம் செய்வதும், தான் தின்பதுமே தன் பிறவியின் கடனாக எண்ணிச் செய்கிறார்கள். எதிரிலுள்ள ஆத்மா எப்படிப்போனாலும் விசாரணையே இல்லை. இதென்ன குணம்?

4. ஒரு காரியத்தைப் பரிமளிக்கச்செய்யும்படிசொல்ல வகைதெரியாவிட்டாலும் அதைக் குட்டிச்சுவராடிக்க கற்றுக்கொடுப்பதில் சிலர் முதல் ஸ்தானத்தில்தோன்றுகிறார்கள். அதனால் இழிவான பெயரும் வார்த்தையும் உண்டானால் சொல்லிக்கொடுத்தவர்களுக்குப் பரமசந்தோஷம்போலும்.

5. 'வரவர காலம் கெட்டுப் போய்விட்டது' என்ற பல்லவியைப் பாடிக்கொண்டே சிலர் அக்ரமத்தையே செய்வது வேடிக்கையிலும் வேடிக்கை. அவர்கள்தான் நாக்கைத் தீட்டிக்கொண்டு வம்புக் கலந்து இல்லாத பொல்லாத விஷயங்களைச் சேகரித்து தம்பட்டமடிக்கக் கிளம்பி விடுகிறார்கள். இந்த குண்டுணித்தனம் கெட்டதில் சேர்ந்ததாக அவர்கள் நினைப்பதில்லைபோலும்.

6. 'வீட்டிற்குப் பெரியவர்கள்' என்கிற மதிப்பே சிலருக்குக் கிடையாது. தாமே பெருதனம் செய்து ஆட்டமாடுவது. ஏதாவதொரு விஷயத்தில் தகராறோ, ஆபத்தோ வந்துவிட்டால் அப்போது அப்பெரியவரிடம் காலைப் பிடிக்க ஓடிவருவது. இப்போது மட்டும் தம் பெருதனம் ஏன் பலிக்கவில்லை?

7. சிநேகிதர்களையோ, சம்பந்திகளையோ, மற்ற பந்துக்களையோ மரியாதை தெரிந்து உபசரிப்பதென்பதை ஒரு பாடமாகவோ, கலையாகவோ, கொள்ளவேண்டும். இந்த விதரணையும், பணிவும் சிலருக்குத் தான் தெரிகிறது. சிலருக்கோ பிறர் நடத்திக்காட்டும் மரியாதைக்குப் பதில் மரியாதை செய்யக்கூடத் தெரிவதில்லை. அதிலும் பணச்செலவுடன் மரியாதை செய்வதென்றால் நாலடி பின்னால் கையை இழுக்கிறது. பணத்தை நாளை காணலாம். இந்த சமயத்தையும், நல்ல பெயரையும் காணமுடியுமா?



# கன்யா குமரி

*

"ஸ்ரீவத்ஸன்"

*



காமிராட் ரிஸர்வ்ட்.



ஜகன்மோகினி





# கண்கொள்ளாக் காட்சி

—"வை. மு. ஸ்ரீ."

"கண்டேன்! கண்டேன்! கண்டேன்!
நேத்ரானந்தனைக் கண்டேன்!
இன்பம் கொண்டேன்!" (கண்)

என்று குதூகலமாகப் பாட எனக்கு இப்போது உரிமை உண்டு. ஏனெனில் கன்யாக்குமரி க்ஷேத்திரத்தை நான் பார்த்தாகிவிட்டது. நமது தென் கோடி எல்லையையும் மெறித்தாய்விட்டது! 3 சமுத்திரங்கள் சேரும் அவ்வழகிய காட்சியையும் கண்டாகிவிட்டது! மிக தேஜஸ்ஸுடன் விளங்கும் ஸ்ரீ அம்பாளின் தரிசனமும் கிடைக்கப்பெற்றேன். இனி என்ன குறைவு?

ஒன்றே ஒன்றுதான். அதாவது உங்களில் பலர் ஷ ஸ்தலத்தை இன்னும் விஜயம் செய்திருக்கமாட்டீர்கள்; அப்பேர்ப்பட்டவர்களுக்கு அவ்விடத்தைப்பற்றி நான் கண்டதை சிறிதெடுத்துச்சொல்லாவிடில் அது எனக்குக் குறையாகவே யிருக்கும். சென்ற இதழில் நான் சிதம்பரத்தில் கடத்திய நாளை மறக்கமுடியாத நாள் என்று குறிப்பிட்டேனல்லவா! அதேபோல கன்யாக்குமரியிலும் சில மறக்கமுடியாத அனுபவங்கள் ஏற்பட்டதைக் குறிப்பிடுகிறேன்.

* * *

மாலை 4 மணி இருக்கும். அன்று மாலையே கன்யாக்குமரிக்கு செல்வதாக தீர்மானித்து திருவனந்தபுரத்தைவிட்டுப் புறப்பட்டேன். நாகர்கோவில் வந்து சேர்வதற்கு 7-30 மணிக்குமேல் ஆயிற்று. கன்யாக்குமரிக்குச்செல்லும் பஸ் ஒன்றில் சுமார் 8 மணிக்கு ஏறிஉட்கார்ந்தேன். சில நிமிடங்களுக்குள் சற்று தூரத்தில் நடந்த சம்பாஷணை என் காதில் விழுந்தது. அது பின்வருமாறு:—

ஒருவர்:—எந்த முகத்தைப் பார்த்தாலும் புதிதாகவிருக்கிறதே! யார் நமக்கு உதவி புரியப்போகிறார்கள்?

மற்றொருவர்:—முதல் வரிசையில் உட்கார்ந்திருப்பவரைப் பார்த்தால் சென்னையிலிருந்து வந்துள்ளவர் போலத் தோன்றுகிறது.

ஒ:—அவரும் நமக்கு முன்பின் தெரியாதவர்தானே. அவர் மாத்திரம் நாம் சொல்கிறபடிச் செய்வாரென என்ன நிச்சயம்?

ம:—மிகவும் அவசரமான முக்கிய காரியம் என்று அவரிடம் ரொம்பவும் வற்புறுத்திச் சொல்லி கட்டாயம் உதவி புரியும்படிக் கேட்டுக் கொள்வோம்.

இவ்வாறாகப் பேசிக்கொண்டே வண்டியை நோக்கி வரலானார்கள். "முதல் வரிசையில் டிரைவரையும் என்னையும் தவிர வேறு யாருமில்லையே! இவர்கள் நம்மிடம் என்ன உதவியை எதிர்பார்க்கிறார்களோ தெரியவில்லையே!" என்று நினைத்துக்கொண்டே யிருக்கையில் அவர்களில் ஒருவர் அருகே வந்து 'சார்! பட்டணத்திலிருந்துதானே வராப்லே!' என்று வெகு சகஜமாகக் கேட்டார். 'ஆமாம்' என்று தலையை அசைத்தேன். 'அதானே! அப்படித்தான் இருக்கும்னு நான்நினைச்சேன். எங்கேயோ அடிக்கடி பார்த்தமாதிரியிருந்தது" என்றார். இதற்குள்நேரம் வீணாகிவிடுமென எண்ணியவராய் மற்றொருவர் தன் நண்பரை நோக்கி "வந்த காரியத்தை முதலில் சொல்லுமே" என்று தாழ்ந்த குரலில் முணுமுணுத்தார். சொல்லி வைத்துக் கொண்டு நடப்பவர்கள்போல இருவரும் ஒரேசமயத்தில்கையைக்கூப்பி "உங்களால் ஒரு காரியம் ஆகவேண்டும். அவசியம் உதவி புரியவேண்டும்" என்றார்கள். "என்னால் ஆனதைச்செய்ய ஒரு ஆக்ஷேபணையுமில்லை. நான் என்ன செய்யவேண்டுமென எதிர்பார்க்கிறீர்கள்?" என்றேன்.

உடனே தங்களது முதல் நாளைய அனுபவத்தை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் யாத்ரா

மார்க்கமாக குடும்ப சமேதராக நண்பர்களுடன் சேர்ந்து 14 நபர்கள் வந்தார்களாம். கன்யாக்குமரியில் பஸ்ஸைவிட்டு இறங்குகையில் முக்கியமான பெட்டி ஒன்றை எடுத்துக் கொள்ள மறந்துவிட்டார்களாம். அந்தப் பெட்டியில்தான் இவர்களுடைய யாத்திரை டிக்கட்டுகளும், செலவுக்கு வேண்டிய பணமும், தங்களுடன்வந்துள்ள ஸ்த்ரீகளின் சகல நகைகளும், தவிர சிலபத்திரங்களும் வைக்கப்பட்டிருந்தன வென்றும், ராத்திரி பஸ் திரும்பியபிறகுதான் இந்த பெட்டியை விட்டுவிட்டது தெரிய வந்ததென்றும், இப்பேர்ப்பட்ட முக்கியமான பெட்டி போய்விட்டதால் அப்புதிய இடத்தில் செய்வதென்னவென்றறியாது தவித்துக்கொண்டு பன்னிருவர் இருப்பதாயும், இவ்விருவர் காலை முதல் பஸ்ஸில் நாகர்கோவில் வந்து விசாரித்ததாயும், ஷை பெட்டி 'பிரயாணிகளால் விடப்பட்ட சொத்து' என்ற முறையில் தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டுவிட்டதாயும், அங்கு சென்றுவிவரங்களைச்சொல்லி பெட்டியைஅடையாளம்காண்பித்து வாக்குமூலம் கொடுத்தால் சொத்து கிடைத்து விடுமென்றும்அறிந்ததாகவும், ஷைசமாசாரத்தை கன்யாக்குமரியிலுள்ள பன்னிருவருக்குச்சொல்லி, மறுநாள் காலையில் பெட்டியுடன் இவ்விருவர் திரும்புவார்கள் என தைரியம்கூறும்படிக்கேட்டுக்கொண்டார்கள். சமஸ்தான சத்திரத்தில் தான் அவர்கள் தங்கியிருப்பதாகவும் தெரிவித்தார்கள்.

* * *

இரவு பத்து மணி இருக்கும். கன்யாகுமரியை அடைந்தேன். உடனே ஷை சத்திரத்திற்குச் சென்று அந்த கோஷ்டியினர் எங்கிருக்கின்றனர் என்று விசாரித்து "உங்கள் பெட்டி நாளைக் காலை வருகிறது. அது இப்போது திருவனந்தபுரத்திலிருக்கிறது" என்று மற்ற விஷயங்களை சொல்லி முடிப்பதற்குள் எல்லோரும் புத்துயிர் பெற்றவர்களாக ஆனந்தம்மேலிட தமிழிலும், தெலுங்கிலும், ஆங்கிலத்திலுமாக அவரவர்களுக்குத் தோன்றியபடி வந்தனம் தெரிவித்தார்கள். அவர்களில் இருவர்கூப்பின கையை தொங்கவிடவே யில்லை. ஒருவர் "தெய்வமே தங்களை இப்போது இங்கு நல்ல செய்தியைச் சொல்ல அனுப்பியது போலவே யிருக்கிறது. உங்களுக்கு ரொம்பவும் புண்ணியமுண்டு. சொத்தே போய் விட்டது, திண்டாடப் போகிறோம் என்று தவித்துக்கொண்டிருக்கையில் நீங்கள் கொண்டுவந்த சமாசாரம் சென்ற உயிரே திரும்பி வந்துவிட்டதுபோன்ற சந்தோஷத்தைத் தருகிறது" என்றெல்லாம் வாழ்த்தினர். அவரவர் முகத்தைப் பார்த்தால் அவர்கள் மனதில் யாது தோன்றியதென்பது தெட்டென வெளிப்பட்டது. செய்தியைக் கேட்கும் போதே சகலமும் தங்கள் கைக்குத் திரும்பிவிட்டதாகவே அவர்கள் எண்ணினர்கள். இந்த சம்பவத்தை எளிதில் மறக்கமுடியுமா ?

* * *

அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு சத்திர காரியஸ்தரிடமிருந்து ஒரு அறையின் சாவியை வாங்கிக்கொண்டேன். எனக்கு அளிக்கப்பட்ட சிறிய அறையில் இரண்டு பிரிவுகள் உண்டு. உள் பாதியை சமையலறையாகவும், முன் பாதியை படுக்கையறையாகவும் உபயோகிக்கும் வண்ணம் அமைக்கப் பட்டிருந்தது. அந்த அறையில் ஒரு பக்கம் சுவருக்குப் பதிலாக மரப்பலகைகள் தடுக்கப்பட்டிருந்தன. உள் கதவை பூட்டிக்கொள்வது உசிதம் என்று அறிவிக்கப்பட்டது. ஆவ்வாறே கதவை மூடிவிட்டு அங்கிருந்த பெஞ்சியின்மீது படுத்துக் கொண்டேன். காற்று வருவதற்கோ

போவதற்கோ வழியே கிடையாது. இருள் சூழ்ந்திருந்தது. தூக்கமே வரவில்லை. மணி 12-ம் அடித்து விட்டது. 'காலையில் சீக்கிரம்எழுந்து சூரிய உதயத்தைப் பார்க்கவேண்டுமே, இப்படி தூக்கம் வராமல் விழித்துக்கொண்டிருந்தால் அதி காலையில் எப்படி எழுந்திருக்க முடியும்? கண்ணை கெட்டியாக மூடிக்கொண்டு தூக்கத்தை வர வழைத்துப் பார்ப்போம்' என்று என்னால் முடிந்தவரை முயன்றேன். வலது பக்கம் உள்ள அறையிலிருந்து பெருத்தகுறட்டை சப்தங்கள் வெளி வந்துகொண்டிருந்தன. எங்கும் நிசப்தமாய் இருக்கையில் இந்த சப்தங்கள் சர்ப்பங்கள் சீறுவதுபோல தோன்றியது. சிறிது நேரத்திற்கெல் லாம் மரப்பலகை தடுக்கப்பட்டிருந்த பக்கம் உள்ள அறையில் ஏதோ ஜன நடமாட்டமும், சிறிது சந்தடியும் கேட்டது. உடனே எதையோமெது வாக தட்டும் ஓசை கேட்டது. எனது மனதில் பலவித உணர்ச்சிகள்—சந்தேகம், பீதி, ஆச்சரியம், எழுந்தன. "சமஸ்தான சத்திரத்திற்குள் கூடவா திருடன் வரத்துணிந்தான். இதென்ன ஆச்சரியம்?" என்று நினைத்துக்கொண்டே கவனிக்கலானேன். பலகைகளின் இடுக்கிலுள்ள சந்து மூலமாக வெளிச்சம் என்னுடைய இருட்டு அறையில் விழுந்தது. கொஞ்சநேரம் பளிச்சென்றும், கொஞ்சநேரம் மங்கலாகவும் வெளிச்சம் இருந்தது இன்னும் சந்தேகத்தைக் கிளப்பிவிட்டது. ஏதோ அனர்த்தம்தான் நடக்கப் போகிறது என்று திட்டமாகத் தோன்றிவிட்டது. கதவைத்திறந்து வெளியில் வந்து பார்க்கலாமாவென்றும் தோன்றியது. ஆனல் போதிய அளவு தைரியம் பிறக்கவில்லை. சந்தடியும் குறைந்தது. வெளிச்சமும் மங்கலாகி மறைந்துபோயிற்று. கதவைச் சாத்தும் சப்தம் கேட்டது. என் அறையின் கதவிலுள்ள துவாரத்தின் வழியாகப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! என்னைப்பற்றியே நான் சிரிக்கும்படி இருந்தது! சத்திரத்தைச் சேர்ந்த குமாஸ்தா கையில் மங்கலாக வைக்கப்பட்ட ஹரிகேன் விளக்குடன் என் அறையைத் தாண்டி சென்றார். பிறகு விசாரித்ததில் அந்த அறையில்தான் சாமான்கள் வைக்கப்பட்டிருந்தன வென்றும், அவர் தூங்குவதற்கு முன்பு ஏதோ காரியமாக அங்கு வந்தாரென்றும், எனக்கு தோன்றிய யாவும் பீதியினல்தான் என்றும் தெரியவந்தது. "ரொம்ப சமத்து" என்று பட்டம் சாற்றிக்கொண்டு நித்திரா தேவியை கிருபை செய்யும்படி பிரார்த்தித்தேன்.

* * *

மறுநாள் அதிகாலையில் எழுந்து சூரியனின் வரவை வெகுஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு கடற்கரையில் நின்றிருந்தேன். ஜகஜ்ஜோதியாய் சிவப்பாக நெருப்புப் பந்து போல தண்ணிக்குள்ளிருந்து எழுவதுபோல சூரியன் தோன்றிய காட்சியை என்னென்று சொல்வது! அத்தகையதோற்றத்தைவேறெந்தஇடத்திலும் நமது நாட்டில்காணமுடியாதென சுலபமாகச் சொல்லிவிடலாம். நேரில் பார்த்தால்தான் அக் கண்கொள்ளாகாட்சியின்அழகுவிளங்கும்.

* * *

ஊர் முழுதும் சுற்றிப் பார்த்து விட்டு சத்திரத்திற்கு வந்து காமெராவை வைத்துவிட்டு, சமுத்திர ஸ்நானத்திற்கு சென்றேன். நன்ருக நீந்தத் தெரிந்தவர்கள் ஸ்நானம் செய்வதற்குஒருஇடம்;நீந்தத்தெரியாவிடினும் பயமின்றி சமுத்திரத்தில் இறங்குவோருக்கு ஒரு இடம்; பயப்படுபவர்களுக்கு ஒரு இடம்—ஆக மூன்று தனி இடங்கள் உள்ளன. இரண்டாவதாகக்குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றேன். அவ்விடத்தில்

'மருந்துக்குக்கூட' ஒருவருமில்லை. நான் ஸ்நானம் செய்துகொண்டிருக்கையில் ஒருவர் வந்து "அடாடா! வெறுமையா ஸ்நானம் பண்ணறது! இவ்வளவு தூரம் வந்துவிட்டு சங்கல்பம் செய்யாமலா ஸ்நானம் செய்வது! புண்ணியம்வேண்டாமோ! வாங்கோ இப்படி கரைமேல். நான் சங்கல்ப மந்திரம் சொல்கிறேன்'' என்று என்னுடைய நற்கதியில் மிகவும் சிரத்தையுள்ளவர்மாதிரி உரைத்தார். இம்மாதிரி புரோகிதர்களைக் கண்டால் எனக்கு எப்போதும் பயம். அவர்கள் தப்பும் தாறுமாக ஏதாவது சொல்லி, அந்த மந்திரத்தை நாம் அர்த்தம் தெரியாது திருப்பிச் சொல்லிவிடபோகிறோமே என்ற பயம். முதல் நாள்தான் வர்க்கலையில் ஒரு அனுபவம் ஏற்பட்டதே. (அதைப்பற்றி இன்னொரு சமயம் சொல்கிறேன்.) அதை மறப்பதற்குள் இங்கு இவர் வந்துவிட்டாரே என்று சங்கடப்பட்டேன்.

"சாஸ்திரிகளே! புண்ணியம் எப்படியும் வரும். கோயிலுக்குச்சென்று அம்பாளை சேவித்தால் தானாக பாவம் தொலைகிறது. உமக்கு வேண்டியது பணம்தானே. சற்று காத்திரும். ஸ்நானத்தை முடித்துவிட்டு வந்து கொடுக்கிறேன்'' என்று வேகமாகச் சொன்னேன். அசட்டு சிரிப்பு சிரித்துக்கொண்டே "பணம் இருக்கட்டும்ணா! புண்ணியத்துக்காகத்தான் சொன்னேன்'' என்று சொல்லிக் கொண்டே உட்கார்ந்தார். நான் பதிலே சொல்லாது எனது ஸ்நானத்தை சிறிது சீக்கிரமாகவே முடித்துவிட்டுக் கரையேறி வந்து பைக்குள்ளிருந்து ஒரு வெள்ளி சக்கரத்தை எடுத்தேன். அப்போதும் அவர் ''மந்திரம் சொல்லிக்கொடுத்தால்தான் பலனும் புண்ணியமும் உண்டு'' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தார்.''சாஸ்திரிகளே! பணம் வேண்டுமானால் பேசாமல் வாங்கிக் கொள்ளும். இல்லாவிடில் நான் ஒரு நிமிடம்கூட நிற்காமல் போய்விடுவேன்'' என்று சொல்லி முடிப்பதற்குள் கையை முழு நீளம் நீட்டினார். பணத்தைக் கொடுத்து அவரையனுப்பிய பிறகுதான் எனக்கு நிம்மதி ஏற்பட்டது.

* * *

கோவிலுக்குச் சென்றேன். அன்று ஏதோ விசேஷம். அபிஷேகம் நடக்கப்போவதாகத் தெரிவித்தார்கள். கோவிலுக்குள் சென்றதும் கோயில் காரியாலயத்திற்குச் சென்று அங்கு சட்டையைக் கழட்டி வைத்துவிட்டு அர்ச்சனைச் சீட்டு வாங்கிக்கொண்டேன். அதில் எனது பெயரும் நக்ஷத்திரமும் குறித்துக்கொண்டார்கள். அதன் நகலில் என்னுடைய கையெழுத்தையும்வாங்கிக்கொண்டனர் இவை யாவும் எனக்குப் புது அனுபவமாகஇருந்தன. சந்நிதிக்குள்சென்றேன். கோடியில் செல்லும்போதே அம்பாளுக்கு சமர்ப்பிக்கப் பட்டிருந்த வைரத் திருகு பிரகாசமாக மின்னிக்கொண்டிருந்தது. உத்ஸவ விக்ரகம் வெளி மண்டபத்தில்அபிஷேகத்திற்காக வீற்றிருந்ததால், சந்நிதிக்குள் மூல விக்ரகம் மாத்திரம் கண்கொள்ளாக் காட்சி யளித்துக் கொண்டிருந்தது. நகைகளோ, புஷ்பமோ ஒன்றுமின்றி சர்வ சாதாரணமாக அலங்கரிக்கப்பட்ட அம்பாள் ஒரு தனி சோபையுடன் விளங்கினாள். நெடுநேரம் சேவித்துவிட்டு உத்ஸவ விக்ரகமிருக்குமிடத்திற்கு வந்தேன். அபிஷேகத்திற்குத் தயாராயிருந்தமையால் அங்கும் ஒருவித ஆடம்பர அலங்காரமுமில்லை. மதுரை மீனாக்ஷியம்மனைப்போலவே காட்சி கொடுத்தாள் கன்யாக்குமரியம்பாள். கண்ணாரக்கண்டு, மனதாரத்துதித்து வெளியே வருகையில் மணி 12 அடித்துவிட்டது. அன்று காலையில் எழுந்தது முதல் அந்த நிமிடம்வரை நடந்தவைகளை நினைக்கையில் மன

தில் ஒரு தனித்த குதூகலம் ஏற்பட்டது. "கண்டேன்! கண்டேன்!" என்று முதலில் குறிப்பிட்ட 'பாட்டு' தானாக வெளிப்பட்டது.

* * *

இவ்விதழில் மற்றொரு பக்கத்தில் பிரசுரமாகியுள்ள கன்யாக்குமரி படங்களைப் பாருங்கள். மேல் வரிசையில் முதலிலிருப்பது "விவேகானந்தர் குன்றம்" என்று சொல்லப்படும் இடம். ஒரு சமயம் ஸ்ரீ ஸ்வாமி விவேகானந்தர் அதன்மேல் நின்று ஒரு அரிய பிரஸங்கம் செய்தாராம். இரண்டாவதாக உள்ளதுதான் கோபுர வாசல். சமுத்திரத்தை நோக்கியுள்ளது. சில நாட்கள் தவிர மற்றெல்லா நாட்களிலும் மூடப்பட்டிருக்கிறது. கீழ்வரிசையில் முதலில் உள்ளது மேலேகுறிப்பிட்ட கோபுர வாசலுக்கு எதிரே உள்ள சமுத்திரக்கரை. நடுவிலுள்ளது கோவிலின் மேற்கு கோபுரவாசல். இது தான் எப்போதும் திறந்திருக்கிறது. பிரதான கோபுரவாசல் மூடப்பட்டிருக்கையில் இந்த பின்வழியாகத் தான் சந்நிதிக்குச் செல்லவேண்டும். கடைசியிலிருப்பது கோவிலுக்குச் சற்று தூரத்திலுள்ள சமுத்திரக் கரை மண்டபம். சாதாரணமாக அச்சடிக்கப்பட்ட இப்படங்களைப் பார்க்கையிலே ஷை ஸ்தலத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை எழுகின்றதல்லவா?




## RAJASIMHA

*by C. V. V. Published by K. C. Vadhyar - Karamanai Trivandram. Price as. 8.*

In this play in three acts the author tries to do justice to the story of a Chola King Rajasimha. King Ratnakanta Chola and his queen are murdered by the ambitious army chief Veeravarman who usurps the throne. Veerabahu, a faithful lieutenant wreaks vengeance on Veeravarman on behalf of the dead king, though Rajasimha, the heir apparent is almost prepared to forgive his foe for the love of his daughter Vasanthamalli. Finally Rajasimha becomes king. The scenes are well placed and there is enough scope for the play of emotions. Except for some Vernacular idioms, the English is fairly good. On the whole a praiseworthy attempt.

—V. V. R

# வாணியின் பிரசாதம்

சாஹித்யகர்த்தா—வை. மு. கோதைநாயகி :

நாரதமுகாரி ராகம்: ஆதி: தாளம்.

பல்லவி

நின்னுவினா கதிலேதுரா! நீரஜதளலோசனா! (நி)

அநுபல்லவி

ஸன்னுதாங்க நீதுசரணாம்புஜமுலலோ
வின்னபமு ஸேயுசுன்னானு ப்ரோவ. (நி)

சரணம்

கருணாகடாக்ஷா! ஸ்ரீபரமதயாளுட!
கருடவாகனா! கோதாநாயகா!
சரணன்னுமுறலிட தருணினி ப்ரோசின
நரஹரி நீபாத நம்மிதினய்யா! (நி)

11-வது மேளகர்த்தா.

## கோகிலப்ரிய

ஜன்ய ராகம் :

## நாரதமுகாரி

ஸ்வரப்புடுத்தியவர் :—ஏ. பார்த்தசாரதி :

ஆரோஹணம்—ஷாடவம்.

| ஸ | ரி | க | ம | ப | த | ஸ் |
|---|---|---|---|---|---|---|
| | ஸு | ஸா | ஸு | | ச | |

அவரோஹணம்—ஸம்பூர்ணம்.

| ஸ் | நி | த | ப | ம | க | ரி | ஸ |
|---|---|---|---|---|---|---|---|
| | கா | ச | | ஸு | ஸா | ஸு | |

இராகம் - நாரதமுகாரி : **பல்லவி** சதுரஸ்ர - ஜாதி த்ரிபுடை:

1 , , , ● ஸ - ரி கமா - பமபா - , தஸ்ா | , , ப - த ஸ் நி த | பா பா - ; மா
நின் னுவினு கதிலே துரா | நீ ர ஜ த | ள லோச சா

1 பமகரிஸநி ● ஸ - ரி கமா - பமகரி ஸரிகம - பதஸ்ா | , , ப - தா பதஸ்ரிக்ரி | ஸ் நி தா பா ; - பதநித
ணு நின்னுவினு க தி லே துரா | நீ ர ஜ த | ள லோ ச
பமகரிஸ்நி
ணு

**அநுபல்லவி**

1 , , , ● ஸ் - நிதாப - தாஸ்ா - , ரிஸ்ா | , , ஸ் - ரிக்ா ரி | ஸ்ா ; ஸ் நி தா - , பதா
ஸன் னுதாங்க நீ து | ச ர ணும் பு | ஜ மு லலோ

2 , , , ● ஸ் - நி தா ப - தா ஸ்ா - , ரிஸ்ா | , , ஸ் - ரி க்ா ரி | ஸ்ா ; ஸ் நி தா - , பமா
ஸன்னு தாங்க நீ து | ச ர ணும் பு | ஜ மு லலோ

, , , ● ப - மகா ரி - கா மா கமபா - , தஸ்ா | , , ஸ் - ா நி த ப | மாபாமபதா - ; ; பதநித
வின்னப முஸே யு | சுன் னு னு | ப்ரோ வ
பமகரிஸநி ●

**சரணம்**

, , , ● ப - பபாம - பா ; - ; மபதா ; | , , ப - தா பதஸ்ா நீ | தா ; - , பமா
க ருணு க டா க்ஷ ஸ்ரீ | ப ர ம த | யா ளுட

, , , ● ப - மகரீ - ஸா ; ஸநிதா - , ரிஸா | , , ஸ - ரி க ம ா | பா ; - ; மபதா ;
க ருட வா க ணு | கோ தா | நா ய கா

, , , ● ஸ் - நி தா ப - தாஸ்ா - , ரிஸ்ா | , , ஸ - ரி க் ா ரி | ஸ்ா ; ஸ் நி தா - , பமா
ச ர ணன்னு மு ற வி ட | த ரு ணி | னி ப்ரோ சி ன

, , , ● ப - மகா ரி - கா மா கமபா - , தஸ்ா | , , ஸ் - நி தா ப | மா பா மப தா - ; ; பதநித
ந ர ஹ ரி நீ பா த | நம் மி தி | னே ய் யா
பமகரிஸநி ●

வெய்யிலின் வெப்பம் சகிக்கமுடியவில்லை. நெருப்பில்லாமலேயே பற்றிக்கொள்ளும்போல் காய்கிறது. குழந்தை முதல் சகலரும் "அப்பா! அஸ்! உஸ்!" என்று அலற்றுகிறார்கள். நித்யாவின் தகப்பனார் இந்த வெய்யில் அடியோடு பொறுக்க முடியாது தவித்தார். நித்யா குளிர்ந்த ஜலத்தில் துணியைப் பிழிந்து அவருக்கு உடம்பில் போட்டு விசிறிக்கொண்டிருந்தாள்.

திரு:—இந்த வெய்யிலை இன்னும் 2 நாட்களுக்கு எப்படி சகிக்க முடியும்? என்றால் பொறுக்கமுடியவில்லையே! மணி இன்னும் 11 ஆகவில்லை. இதற்குள் இப்படியானால் இன்னும்போகவேணுமே—என்றார்.

கல்யாணப் பெண்ணைப் பார்க்க வரும் பெண்களோ கணக்கு வழக்கில்லை. நேரில் என்ன சொல்லமுடியும்? ஏதோ பேசிச் சென்றார்கள் சிலர். சிலரோ வெறுமை இருக்கமுடியாமல் தமது அனுதாபத்தைக் காட்டி "உம். தலையெழுத்து என்று இதற்குத்தான் சொல்வது. இந்த ஹரிஹரனும் இவன் தாயார் குப்பம்மாளும் சேர்ந்து கொண்டு மூத்த மருமகளைச் செய்த சித்திரவதை சொல்லமுடியாது. அந்த இம்ஸைபொறுக்காது அது கிணற்றில்விழுந்து பிராணனை விட்டது. இரண்டாவது மருமகள் ஏதோ சுமாராக நடத்தப்பட்டாள்; அதற்குள் அவளே போய்விட்டாள். தங்கக்கொடிபோல் இருக்கும் இவளையாவது நேராக நடத்தவேண்டும். பெண்டு பாக்கியமில்லாத அவனுக்கு இவளாவது தக்கவேண்டும்" என்றார்கள்.

இவைகளைக் கேட்கக் கேட்க ஞானம்பாளின் இதயத்தில் சங்கடஞ் செய்கிறது. 'என் ஒரே பெண்ணை, கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்த செல்வத்தை, இத்தகைய மனுஷ்யனுக்கா கொடுப்பது? அவன் என்ன செய்துவிடுவானோ! இந்த ரகஸ்யம் தெரியாதுபோய்விட்டதே' என்று வருத்தமும் குழப்பமும் உண்டாகியது. நித்யாவோ, ஒருவிதமான கலவரமுமின்றி தன் தகப்பனாருக்குப் பணிவிடைசெய்வதில் ஈடுபட்டிருந்தாள்.

அதே சமயம் முனிசீப்பின் வீட்டில் பெருத்த குழப்பமும் கலவரமும் உண்டாகியிருந்தது. கோபுவின் மனத்தை அவனால் கட்டுப்படுத்தவே முடியவில்லை. நித்யாவின் பிம்பம் அவனைப் பித்தனாக மாற்றி மனத்தைச் சிதறவடித்துவிட்டதால் அவன் வீட்டிற்குவந்து வெகு நேரம் தன் மனத்துடனேயே போராடினான். "இந்த பூங்கொடியையா அந்தக் கிழவன் மணப்பது? ஐயையோ! என்ன அக்கிரமம்" என்று நினைக்கும்போது பகீரென்று அவனுடைய தேகமே பற்றி எரிவதுபோலிருந்தது. அன்று சாப்பாட்டிற்குக்கூட அவன் செல்லவில்லை.

மாமி:—கோபூ! மணியாகிவிட்டதே! மாமாவுக்கு தினம் 12 மணி சாப்பாடுதான். நீ மட்டும் வந்து சாப்பிட்டுவிடேன். உனக்கு மிகவும் பிடித்தமான பருப்பு உருண்டை குழம்பும் உருளைக்கிழங்கு

வறுவலும் செய்திருக்கிறேன். வாடாப்பா!

கோபு:—மாமீ! காலையில் இட்லி சாப்பிட்டதே வயிற்றில் இன்னும் இருக்கிறது. பசியே எடுக்கவில்லை. இன்னும் சற்று நேரம் கழித்துச் சாப்பிடுகிறேன். மாமாவும் வரட்டும். அது கிடக்கட்டும்; அடுத்த வீட்டில் என்ன தடபுடல் படுகிறது மாமீ!

மாமி:—ஐயோ, ராமா! அந்த கண்றாவியை ஏன் கேட்கிறாய்? அந்தப் பெண் அளவிலாத பாவத்தைச் செய்து ஒரு குருடன் வயிற்றில் பிறந்தாள். வறுமைப் பேயும் பூராவாகப் பிடித்து ஆட்டுகிறது. ஸௌந்தர்யதேவதையோ பரிபூர்ணகலையுடன் அப்பெண்ணை ஸ்வீகரித்துக்கொண்டிருக்கிறாள்; ஆனால், அதிர்ஷ்டதேவதை நிராகரித்து விட்டாள். இத்தனை அலங்கோலத்தின்மத்தியில்பிறந்த பெண் தன்னைத்தானே தியாகஞ் செய்வதற்கொப்ப நான்கு குழந்தைகள் உள்ள ஒரு கிழவனை மணந்துகொள்ளத்துணிந்து வந்திருக்கிறாள். அந்த கல்யாண தடபுடல்தான் பக்கத்து வீட்டில் அமர்க்களப்படுகிறது. உங்க மாமாவைவிடப் பெரியவர் அந்த மனிதர்.

கோபு:—மாமீ! நான் என் பெற்ற தாயிடம் சொல்வதுபோல் உன்னிடம் சொல்கிறேன். நீதான் எனக்குச் செய்து வைக்க வேண்டும். இந்தப் பெண்ணை நான் காலையில் கோயிலில் பார்த்தேன். மாமாவின் மூலம் விஷயமறிந்தேன். அது முதல் என் மனது தத்தளிக்கின்றது. அவளை நான் கல்யாணம் செய்துகொள்ள என்னுள்ளம் விரும்பித் தவிக்கின்றது. தன் குடும்பத்தைக் காப்பதற்காகத் தன் இளமையையும், வாழ்க்கையையும் தியாகம் செய்யத் துணிந்த அவ்வுத்தமியின் பரிசுத்தமும் தீர வைராக்கியமும் என்னை பிரமிக்கச் செய்கின்றன. மாமீ! எனக்குள்ள சொத்து பூராவையும் நான் அவளுக்காக அவளுடைய பெற்றோருக்குக் கொடுத்துவிடுகிறேன். இந்த கிழவன் கல்யாணத்தைமாற்றி எனக்கு முடித்துவிடு. வெட்கத்தையும் விட்டு நான் உன்னிடம் சொல்கிறேன்—என்றான்.

இம்மாதிரி கோபு சொல்லப்போகிறான் என்று அந்தம்மாள் கனவில்கூட நினைத்திருக்கமாட்டாள் பாவம். கோபுவின் வார்த்தை அவளைத் தூக்கிவாரிப்போட்டது. இதுமாதிரியான விஷயங்களை அவள் கேட்டதே இல்லை. அதோடு பையன் லக்ஷாதிபதியானவன். தன் சொத்துக்களைக் கொடுத்துவிடுவதென்றால் வாய் லேசான காரியமா! பெற்றோர்களின் சம்மதம் வேண்டாமா? இந்த காரியத்தில் தாம் ப்ரவேசிப்பது தெரிந்தால் தன் நாத்தனார் தங்களைத்தானே தூற்றுவாள். 'வெறும் அழகுக்காக ஒரு தரித்திரத்தைக் கட்டச் செய்தாயா?' என்று கேட்டால் என்ன பதில் சொல்வது?" என்று பலவிதமான யோசனைகளும் எண்ணங்களும் தோன்றிவிட்டன. பதில் சொல்லாமல் தியங்கினாள்.

இவள் தியங்குவதைக்கண்ட கோபு "மாமீ! என்ன மவுனம் ஸாதிக்கிறாயே! நீ செய்யமாட்டாயா?" என்று கேட்கும்போது

மாமாவும் வந்துவிட்டார். என்ன விஷயமென்று அவர் கேட்டதற்கு மாமியே விஷயத்தைச் சொல்லிவிட்டாள். மாமாவும் இது விஷயத்தைக்கேட்டதும் பெரிய அதிர்ச்சியால் தாக்கப்பட்டவராய், "ஐயையோ! கோபூ! ஏதோ ஏழை என்று நீ சொல்கிறாய். இதில் ப்ரவேசிப்பது எனக்குப் பேராபத்தாகமுடியும். ஹரிஹரன் பெரிய உத்யோகஸ்தன். அவன்கீழ் நான் வேலை செய்யும் முனிசீப்பு என்பதை மறந்தாயே! தனக்கு த்ரோகம் செய்யவந்ததாக எண்ணி என்மீது இல்லாத பொல்லாத குற்றத்தை விளைவித்து சோற்றில் மண்ணைப் போட்டுவிடுவான். இந்த ஆசையை விட்டுவிடப்பா எங்களை இதில் மாட்டிவிடாதே, கோபூ! என்மீது கோபிக்காதேயப்பா! எல்லாம் நிச்சயமாகிய பிறகு இம்மாதிரி செய்வது பெருங் குற்றமாகும்" என்று சொல்லிக்கொண்டே போவதைக்கேட்ட கோபுவிற்கு ஆத்திரமே உண்டாகியது.

கோபு:—மாமா! உம்முடையபேச்சு சுத்தமாக நன்றாகஇல்லை. ஒரு கிழவன் ஒரு இளம் பெண்ணை மணந்து அவள் வாழ்வை பாழ் படுத்துவது உங்களுக்கு த்ருப்தியா! நீதி, தர்மம் ஒன்றுமே இல்லையா! அவன் உத்தியோகஸ்தனாகவிருந்தால் உம்மை என்ன செய்துவிடமுடியும்? என்னுடைய க்ராமத்தின் விளைவு பூராவும் நீரே பார்த்துக்கொள்ளும்; காரியஸ்தராக உம்மைச் செய்துவிடுகிறேன். அப்போது சரிதானா! இனிமே தடையில்லையே?...

மாமா:—கோபூ! பரம்பரையாயுள்ள முனிசீப்பு பட்டத்தையுந் துறந்து கெட்ட பெயரும் எடுத்து நான் அவஸ்தைப்பட்டால் உனக்குச் சம்மதமா! விடிந்தால் முகூர்த்தமாகும் நிலைமையில் இனி நிறுத்தச்செய்வது தகுமா! உன்னிடம் சொல்லாத ரகஸ்யம் என்ன இருக்கிறது. சென்ற வருஷத்தில் நான் வஸூலித்த கிஸ்தியில் பாதிக்கு மேல் கட்டாது நின்றிருக்கிறது. என்னுடைய இரண்டு பெண்களுக்கும் கல்யாணம் வைத்துக்கொண்டதில் இந்த குற்றம் ஏற்பட்டது. இதை அந்த மனிதனால்தான் நான் சமாளிக்கின்றேன். இந்த நிலைமையில் அவருக்கு த்ரோகம் செய்யச் செல்வது தலை போகும் ஆபத்தாகவன்றோ முடியும். உனக்கென்னடா குறைவு? நல்ல செல்வத்தில் பிறந்த ரதிதேவியே கிடைப்பாள். இந்த அஷ்டதரித்திரம் எதற்கு? சம்மந்தி என்று சொல்லிக்கொள்ளக்கூட யோக்யதையில்லாத குருடும், செவிடும், ஊமையும், நொண்டியும்...

இதற்குமேல் கோபுவால் தாளமுடியவில்லை. 'மாமா! போதும். நிறுத்துங்கள். வாயுள்ள பிள்ளை பிழைக்கிறான். நானே நேரில் சென்று அந்த அந்தகரை நமஸ்கரித்துக் கேட்கிறேன். இதில் ஒருவருக்கும் ஒரு கஷ்டமும் இல்லையே!' என்று கூறிக்கொண்டே தடதடவென்று எழுந்து சென்றான். அவன் செல்வதைக் கண்டு இருவருக்கும் நெஞ்சு திடுக்கிட்டது. "கோபு! கோபு!" என்று கூட்பிட்டும் அவன் திரும்பியே பார்க்காது போய்விட்டான்.

ஈரத்துணியை தந்தையின்மீது தடவி விசிறிக்கொண்டே நித்யா உட்கார்ந்திருந்தாள். நித்யாவின் மனத்தில் இன்பமோ, துன்பமோ ஒருவிதமான உணர்ச்சியுமின்றி ஏதோ ப்ரமைபிடித்தவள் போல் உட்கார்ந்திருந்த சமயம் திருமூர்த்தி அவளை நோக்கி 'அம்மா குழந்தாய்! உனக்கு முடியுமானல் அந்த மத்யமாவதி ராகப் பாட்டை ஒரு தரம் பாடு. ஆனந்தமாகக் கேட்கிறேன்!' என்ருர். இதைக்கேட்ட நித்யா சற்றும் தியங்காமல் பாடத் தொடங்கினள்.

ராகம்: மத்யமாவதி—தாளம்: ஆதி

பல்லவி

மங்கள ரூபனே! மகிமை ப்ரதாபனே!
பங்கயமலர் தாளா! பக்தாநுகூலா (மங்)

அநுபல்லவி

சங்கு சக்ராயுதா! சாரங்க ஹஸ்தனே!
சங்கடம் தவிர்த்தின்பம் பொங்கிடச் செய்திடும் (மங்)

சரணம்

அலைகடல் துரும்பென அலைந்திடும் நெஞ்சுக்கோர்
நிலையிடம் காட்டிட நேயா! உனக்கரிதோ?
மலர்க்குழலாள் கோதாமன்னவனே! உந்தன்
மலரடி தந்தெந்தன் மனக்குறை தீர்த்தருள் (ம)

என்கிற பாட்டை வெகு இனிமையாகப் பாடினள். அந்த பகல் வேளைக்கும் மத்யாவதி ராகத்தின் அழகிற்கும் வெகு ஆனந்தமாகவிருந்ததை மூர்த்தி மெய்மறந்துஅநுபவித்துக்கொண்டிருந்தான்

அதே சமயம் கோபு வெகு தைரியமாயும், பரப்பரப்பாயும் அங்கு வந்தான். வீதிப்படி ஏறும்போதே இந்த ஆனந்தகரமான சங்கீதத்தைக்கேட்டு ஏற்கெனவே உள்ள தாபம் பின்னும் பன்மடங்காகப் பெருகியது. அவளுடைய திவ்ய மங்கள ரூபத்திற்குச் சிகரம் வைத்ததுபோல் சங்கீதமும்அமைந்திருக்கின்ற அதிசயத்தைஅவனல் தாங்கவேமுடியவில்லை. ரூபஸௌந்தர்யத்தில் ரதியும், சங்கீதத்தில் ஸரஸ்வதியுமாக விளங்கும் இந்த பெண்ணு ஒரு கிழவனுக்கு வாழ்க்கைப்படுவது" என்று நினைத்தபடியே உள்ளே வந்தான்.

கதவருகில் நின்றபடியே, "ஸார்! ஸார்! உள்ளே வரலாமா!" என்று மெல்லிய குரலில் கேட்டான். திருமூர்த்தி வியப்புடன் "நித்யா! யார் கூப்பிடுகிருர்கள், பாரம்மா!" என்ருன். உடனே நித்யா நடைக்கதவருகில் சென்று எட்டிப்பார்த்தாள். மன்மதாகாரமாய் நிற்கும் சுந்தரபுருஷனைக் கண்டும் சற்றும் அச்சமோ, மன அதிர்ச்சியோ ஒரு சிறிதும் கொள்ளாமல் தைரியமாகப் பேசத் தொடங்கி "யாரு?...என்ன சமாச்சாரம்! யாரைப் பார்க்கவேண்டும்" என்று பணிவுடன் கேட்டாள்.

கோபுவுக்கு உண்டாகிய வியப்பிற்கும், திகைப்பிற்கும் எல்லேயே இல்லே. கோயிலில் பார்த்ததைவிடப் பன்மடங்கு அதிகரித்த அழகுடன் காக்ஷி கொடுத்தாள். அவளேப் பார்த்தபடியே "உங்களுடைய தந்தையை பார்க்கத்தான் வந்திருக்கிறேன். நான் இருப்பது வேதபுரி. உங்கள் பிதாவைப் பார்க்கலாமோ!" என்று கேட்டான்.

இந்த வார்த்தையைக் கேட்டுக்கொண்டேயிருந்த திருமூர்த்தி 'நித்யா! உள்ளே வரச் சொல்லம்மா!" என்று தானே சொன்னன். நித்யாவும் வணக்கத்துடன் கோபுவை அழைத்து வந்து தன் தந்தையின் பக்கலில் உட்காரவைத்துவிட்டு "அப்பா! இதோ உட்கார்ந்திருக்கிருர்" என்று கூறியபடியே உள்ளே போய்விட்டாள்.

திரு:—வாருங்கள். இந்த அந்தகனேப் பார்க்கவந்துள்ள தாங்கள் யாரோ? ஒருவேளே சம்மந்தியாத்து மனிதர்களோ!

கோபு:—இல்லே; இல்லே. நான் தனிப்பட்ட மனிதன்தான். நான் வந்த காரியத்தைக் கூறக்கேட்டால் நீங்களே வியப்பீர்கள். நான் இந்த ஊர் முனிசீப்பின் மருமகன். உங்கள் பெண்ணின் விவாக விஷயம் முற்றிலும் கேள்விப்பட்டு மிக்க விசனமடைகிறேன். ஐயா! நான் ஒரு இளம் வாலிபன். பகவத் கிருபையால் ஒருலக்ஷ ரூபாயிக்குமேல் எனக்கு ஆஸ்தியிருக்கிறது. எனக்கு வயது 22 தான் ஆகிறது. B. A. B. L. பாஸாகிவிட்டது. இன்னும் விவாகமாகவில்லே. உங்கள் குமாரத்தியினுடைய த்ருடமான த்யாகம் என்னே ப்ரமிக்கச்செய்ததால் வெட்கத்தையும் விட்டு நானே நேரில் வந்தேன். என் ஆஸ்திபூராவும் இந்த நிமிடமே உங்கள் பெண்ணின் பேரிலாயினும் சரி, தங்கள் பேரிலாயினும் சரி தத்தம் என்று எழுதிவிடத் தயாராயிருக்கிறேன். உங்கள் குமாரத்தியை எனக்கு மணம் செய்துகொடுக்கவேண்டுகிறேன். நான் யாரோ பயித்தியக்காரன் என்று நினேக்கவேண்டாம். ஒரு இளங்குமரியை கேவலம் கிழவனுக்குக் கொடுப்பதைக் காண என்னுல் சகிக்க முடியவில்லே. வறுமையின் தவிப்பால்தானே இத்தகைய பயங்கரமான த்யாகத்திற்குத் துணிந்தது. என்னிடம் ஏராளமான செல்வமிருப்பதால் நீங்கள் சற்றும் கவலேயே படவேண்டாம்" என்று சொல்வதைக் கேட்ட திருமூர்த்தியின் மார்பு படக் படக் என்று அடித்துக் கொண்டது. வெயர்வை வெள்ளமாகப் பொங்கியது. இந்த வாலிபனுக்குத் தான் என்ன பதில் சொல்வதென்றே தோன்ருது திகைத்தான். 'சாக்ஷாத் கடவுள்தான் இந்தவாலிப வடிவத்தில் தன் மகளேக் காப்பாற்ற வந்திருக்கிருரோ!' என்றுகூட தம்பதிகளின் இதயத்தில் தோன்றி பெருமகிழ்ச்சியைத் தந்தது.

திருமூர்த்தி தன் கையை நீட்டித் தடவியவாறு கோபுவைத் தடவிக்கொடுத்து, 'அப்பா! உன் மதுரமான மொழிகள் என் செவியில் ப்ரம்மானந்தமாக விழுகிறதேயன்றி உனது சுந்தரவடிவத்தைக் கண்டு களிக்கும் பாக்யம் பெருத அந்தகனுக என் கர்மா என்னேச்

செய்துவிட்டது. உன் வார்த்தை சாதாரண வார்த்தையாகத் தோன்றவில்லை. அமிருததாரையைப்போலிருக்கிறது. அப்பனே! உன் விருப்பத்தை என் கண்மணி நித்யாவிடம் சொல்லி உடனே ஏற்பாடு செய்கிறேன்...கிழவனுக்கு என் கிளியைக் கொடுப்பதற்கு என் மனம் படும் வேதனையைச்சொல்லமுடியாது...நீ மனுஷ்யரூபத்தில் வந்த கடவுள் என்றுதான் நினைக்கிறேன்' என்று கூறியவாறு "அம்மா, குழந்தாய்!...நித்யா!"...என்று கூப்பிட்டான்.

இங்கு நடந்த சகல சம்பாஷணைகளையும் கேட்டுக்கொண்டே இருந்த நித்யா அங்கு வந்தாள். அவளது பெற்றோரின் இதயத்தில் பெருக்கெடுத்த மகிழ்ச்சி வெள்ளம் அவள் மனத்தில் ஒரு சிறிதும் உண்டாகவில்லை. அதற்குப் பதில் துக்கமும், குழப்பமும் உண்டாகியது. அவ்வாலிபனை அவள் சரியாகக்கூட நிமிர்ந்து பார்க்கவில்லை. 'எனப்பா!'...என்று கூறியவாறு தந்தையின் முன்பு நின்றாள்.

கோபுவின் கண்கள் நித்யாவின் சௌந்தர்ய அமிருதத்தை அள்ளிப்பருகுகின்றவேகத்தை யாரறியக்கூடும். அதிலும் அந்தகனுக மூர்த்திக்கு என்ன தெரியும்? வார்த்தைகளைக் கேட்டு இன்புறுவதைத் தவிர இந்த ஜென்மத்தில் அவனுக்கு வேறு சந்தோஷம் ஏது? ..."அம்மா!...இதோ வந்திருக்கும் வாலிபன் சாக்ஷாத் ஈச்வரனைப்போலவே எனக்குத் தோன்றுகின்றது" என்று கூறும்போதே நித்யா அதைத் தடுத்து, "அப்பா! சகல விஷயங்களையும் நான் கேட்டுக்கொண்டுதானிருந்தேன். நாம் என்ன ஆறறிவு படைத்த உயர்ந்த மனிதர்களா அன்றி மிருகமா! நாக்கும், நாணயமும் நம்மிடம் உண்டா! அல்லது கடையில் நிமிஷத்திற்கு ஒரு விலையில் ஏலம் விடும் வியாபாரிகளா!" என்றாள்.

திருமூர்த்திக்கு இந்த வார்த்தையைக் கேட்டதும் தீயை மிதித்ததுபோல் அதிர்ச்சி உண்டாகியதென்றால் வாலிபனின் மனத்துடிப்பைக் கூறவேண்டுமா! அப்படியே இடி இடித்ததுபோலாகிவிட்டது. இம்மாதிரி நித்யா சொல்வாள் என்று அவளுடைய பெற்றோர்கள் சற்றும் எதிர்பார்க்கவே இல்லை. "ஆ!...ஆ!...நித்யா!.... இதென்ன பேச்சு? உன்னைத் தேடிக்கொண்டு பகவானே காப்பாற்ற வந்திருக்கையில் நீ இப்படியா பேசுவது?"....என்று ஞானம் துடிதுடிப்புடன் கேட்டாள்.

நித்யா:—அம்மா! அப்பா! கோபித்துக்கொள்ளாதீர்கள். அவரவர் தலையில் எப்படி எப்படி பகவான் எழுதியிருக்கிறானோ, அப்படித்தானே சகலமும் நடக்கும். இந்த ஞானத்தை நீங்கள் அறிந்தும் அறியாததுபோல் மறப்பது தகுமா! நீங்கள் அந்த மனிதருக்கு வாக்குக் கொடுத்து பத்திரம் முதல் எழுதிப் பணமும் பெற்றுக் கொண்டபிறகு, வியாபார முறையில் மாற்றுவதுபோல் வாக்கு நாணயத்தை மாற்றுவது மனிதத்தன்மைக்கும், சத்தியத்திற்கும், பொருந்துமா! நான் ஒரே ஒரு கேள்வி கேட்கின்றேன். இன்று

இவ்வாலிபர் லக்ஷாதிபதியாக வந்திருப்பதுபோல் நாளை இன்னொரு வாலிபன் கோடி ஐச்வர்யவந்தனாய் வந்தால் நீங்கள் இவரை விட்டு அவனைத் தாவுவீர்களல்லவா!

அப்படியே இந்தவாலிபரும், என்னைவிடப்பன்மடங்கு அழகிலும் அறிவிலும், செல்வத்திலும் ஒன்றுகூடிய ஒரு சௌபாக்கியவதி நாளை கிடைப்பாளேயானால் என்னைவிட்டு அங்குதானே தாவிச் செல்வார். அம்பாள் சன்னிதியில் நான் பிரமாணஞ்செய்து என் கோரிக்கை நிறைவேறியதாகப் பரமசந்தோஷத்துடன் வந்தபிறகு இந்த மாறுபாட்டமும் வீண் சபலமும் எதற்கு? நம்மை உலகம் எப்படி நிந்திக்கும்? என் தலைவிதியை மாற்றவல்லவர் உண்டா! நம்பிக்கைத் துரோகஞ்செய்த பாதகந்தானே நம்மைச் சூழும்?"...என்றாள்.

ஞா:—(இடைமறுத்துப் பேசத்தொடங்கி) நித்யா! நீ பேசுவது புத்திகெட்டத்தனமாயிருக்கிறதே. உன்னுடைய ரூபலாவண்ய மென்ன? நீ எங்களுக்காக கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டு...

நித்:—அம்மம்மா! நிறுத்து...உன் வார்த்தையின்படியே வா. ரூபமாவது லாவண்யமாவது, இந்த பகட்டெல்லாம் எத்தனை காலத் திற்கு நிலைத்திருப்பவைகளம்மா? உன் பாலியத்திலிருந்த அழகாய் இப்போதிருக்கிறாயா! இந்த வாலிபர்தான் இன்னும் இளமையில் இருந்தமாதிரி இப்போதிருக்கிறாரா! இதேபோல் என்றென்றும் இருக்கமுடியுமா! அதோ, எதிரில் உள்ள புஷ்பச்செடியிலிருக்கும் புஷ்பம் இன்று உள்ள அழகு நாளை மலர்ந்து, மறுநாள் உதிர்ந்துவிட் டால் மீண்டும் பெறமுடியுமா! இன்றுள்ள என்னழகின் மவுசால் இவர் என்னை மணக்கத்துணிந்தாலும் நாளை இவருடைய பெற்றோர் இவரை சும்மாவிடுவார்களா! எத்தனை இடங்களில் அழகிற்காக வும், ஆசைக்காகவும், பெற்றோருக்கு விரோதமாயும் பெற்றோருக்குத் தெரியாமலும், விவாகத்தைச்செய்துகொண்டவர்கள் பிறகு கஷ்டப் படுவதையும் அந்தப் பெண்ணை சிலர் அழைக்காதிருப்பதையும், சிலர் அழைத்தும் ஏதோ வித்தியாஸமாக நடத்துவதையும், சில பிள்ளைகள் புத்திகெட்டுத் தாமே செய்துகொண்ட பெண்களைத் தாமே விட்டுச் செல்வதும் உலகத்தில் பிரத்யக்ஷமாகப் பார்க்கவில்லையா!

வீண் வார்த்தைகள் எதற்கு? நியாயத்திற்கும், சத்தியத்திற்கும், கொடுத்த வாக்கை மாற்றாத நாணயத்திற்கும் கட்டுப்பட்டு நடப் பதைத்தான் நான் விரும்புகிறேன். நிமிடத்திற்கு நிமிடம் பச் சோந்தியைப்போல் மாறுவது அழகல்ல. அப்பா! நீங்களே நன்றாக யோசித்துப் பாருங்கள். நாளை முகூர்த்தம் வைத்துவிட்டு இன்று அந்த மனிதன் 'உங்கள் பெண் வேண்டாம். பொருள் நஷ்டமானால் பாதகமில்லை. இவளைவிட அழகாயும், செல்வத்துடனும், பெண் கிடைத்துவிட்டது. அந்தகமான சம்மந்தி எங்களுக்குப் பிடிக்க வில்லை. நீங்கள் போகலாம்' என்று கூறினால் உங்களுக்கு எப்படி இருக்கும்? அதே நிலையில் நீங்களிருந்து நினைத்துப் பாருங்கள்.

நான் வயதில் மிகவும் சிறியவளாகவிருப்பினும் என் மனம் சாதாரண உலக இன்பத்திற்கே அடிமையாகக் கிடக்க விரும்ப வில்லை. பரோபகாரமாக என் வாழ்நாளை ஆனந்தமாகக் கழிக்கவே விரும்புகிறேன். தாயில்லாக் குழந்தைகளுக்கு உழைத்து இன்பமடைய நான் பரிபூர்ணமாக ஆசைப்படுகிறேன். 'இப்படியும் ஒருத்தி சொல்வாளா! இது எங்கேனும் உண்டா! சிறுமி விரும்பு வது காதல் வாழ்க்கைதானே!' என்று சிலர் நினைக்கலாம். உலகம் பலவிதம். ஒவ்வொருவருடைய இதயம் ஒவ்வொருவிதமானது, எல்லோரும் ஒன்றையே தாவவேண்டுமென்பதில்லையல்லவா! ஆத லால் இனி வீண் வாதமோ, வ்யாபார பேரமோ வேண்டாம். எடுத்த காரியத்தை முடிக்கும் பொறுப்பில் வழுவாது நடத்துவோம்...ஐயா! உங்கள் உதார குணத்திற்கு அனேக வந்தனங்கள். நீங்கள் சென்று வாருங்கள். உங்கள் மனத்திற்குகந்த ரதியை மணந்து இல் வாழ்க்கை நடத்துங்கள்" என்று தைரியமாகக் கூறிவிட்டு சடக் கென்று உள்ளே போனாள்.

ஐயோ, பாவம்! வாலிபனின் மனம் எப்படித்தானிருக்கும்? கண்ணில் நீர் முட்டுகிறது. 16 வயது சிறுமியாயினும் நியாயத் திற்குக் கட்டுப்பட்டு சற்றும் சளைக்காமல் ஆணித்திரமாகப் பேசு வதைக்கண்டு ஒருபுறம் ஆச்சரியமும், தனக்குக் கிட்டாத கனியாகி விட்டதைக் குறித்து அடங்காத விசனமும் ஒன்றுகூடிப் பொங்கின. வாய்திறந்து பேசவும் கூடாது தொண்டையை அடைக்கும் துக்கத் துடன் திணறினான். பிறகு சற்று சமாளித்துக்கொண்டு "அப்படி யானால் நான் வந்தவழியே போகவேண்டியதுதானா!" என்று தயங்கியவாறு கேட்டான். மூர்த்திக்கோ ஒன்றுமே தோன்ற வில்லை. பதிலே பேசாது மௌனம் சாதித்தான். நித்யா பதிலே பேசவில்லை. வாலிபன் பிறகு வாய் திறக்காது கண்ணீர்த்துளியுடன் எழுந்து உள்ளே சென்றான்.

அவனுடைய பரிதாபமான முகத்தைப் பார்க்கும் பாக்கியம் மட்டும் மூர்த்திக்கு இருக்குமாயின் நித்யாவின் வைராக்யத்தை எப்படியாவது கலைத்து அவனுக்கு அவளைக் கொடுத்தே இருப் பான். இப்போது இருண்டு சூன்யமாகத் தோன்றும் உலகத்தில் இவனும் ஒரு சூன்யமாகத்தானே தோன்றுவான்.

## 9

"டேய் முத்து! உனக்கிருக்கும் மண்டைத்திமிரால் உனக்கு என்ன கிடைக்கப்போகிறது என்பது இப்போது தெரி யாது. உங்களுக்குள் விஷத்தை வைத்துக்கொண்டு மேலுக்கு வேஷமா போடுகிறாய்? இந்த கல்யாண சமாச்சாரம் தெரிந்து உன் னுடைய மருமானை வரவழைத்து இதைத்தட்டி அவனுக்கு முடித்து விடவா யோசனை செய்திருக்கிறாய்? இந்த நிமிடத்துடன் உன்னு

டைய முனிசிப் உத்யோகம் தொலைந்தது. ஜாக்ரதை. நீ கட்டவேண்டிய பாக்கி வரிப் பணத்தை இந்த நிமிடமே கீழே வைத்துவிட்டு மறு காரியம் செய். இல்லையேல் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவின் ஜன்ம ஸ்தானத்திற்கு விருந்தாளியாகச் செல்வதற்குத் தயாராயிரு தெரிந்ததா !'' என்று ஹரிஹரன் கர்ஜனை செய்தான்.

இதைக்கேட்ட முத்துகிருஷ்ணனுக்குக் குலைநடுக்க மெடுத்துக்கொண்டது. 'கடவுள் சாக்ஷியாக நான் ஒருபாபமும் அறியேன். இது சத்தியம். நான் ஏழை; பிள்ளைகுட்டிக்காரன். என் வாயில் மண்ணைப்போடாதீர்கள்'' என்று கெஞ்சினான். இதே சமயம் கோபு திரும்பிவந்தான். வீட்டில் நடக்கும் ரகளையைக் கண்டு அவன் மனது கலங்கியது.

''சார்! என் மாமாவினிடம் எவ்விதமான குற்றமும் இல்லை. என்னிடம் அவர் ப்ரியமாயிருப்பதற்காகத் தாங்கள் அவருக்கு அத்தகைய தண்டனையைக்கொடுக்கவேண்டாம். நானேசெய்த காரியத்திற்குத் தக்க மரியாதையை நானடைந்தேன். அந்தப் பெண் மணியின் மனோ உறுதி உலகமே வியக்கும்படியாயிருக்கிறது.

என் மாமா ஒரு பாவமும் அறியாதிருக்கையில் அவரை பெரிய குற்றம் செய்ததாகக் கூறும் நீர் செய்யப்போகும் மகத்தான குற்றத்திற்கு உம்மை தண்டிப்பவர்கள் யாருமில்லை என்று நினைக்க வேண்டாம். தொண்டு கிழமாகிய பிறகும் உம்முடைய பாழாப் போன கல்யாண ஆசையை விடாது உமது பேத்திக்குச் சமமான பெண்ணைச் சற்றும் கூசாமல் தியங்காமல் இளங்குமரன்போல் எண்ணி மணக்கத் துணிந்தானது ஒரு பெண்ணின் வாழ்க்கையை அடியோடு பாழாக்குவதற்கொப்பாகவிருக்கின்றதென்பதை நீர் அறியாவிடினும் உம்மைப் படைத்த சர்வேசன் அறிந்துதான் தன் ஏட்டில் பதிவுசெய்து வைத்திருக்கிறான். இந்த வதை உம்மைவிட்டு ஒருபோதும்நீங்காது. இந்தசுந்தராங்கியை உமதுஇளங்குமாரனுக்கு மணம்செய்து கண்ணாரக் காண உமது கல் நெஞ்சில் ஏன் தோன்றக்கூடாது'...என்று ஆத்திரத்துடன் கூறுவதைக்கேட்க மாமாவுக்கு பின்னும் பயம் எடுத்துக்கொண்டதால் அவனைத் தடுத்து வாயைப் பொற்றி இழுத்துக்கொண்டு போய்விட்டார்.

ஹரிஹரனுக்கு வந்த கோபத்தைக் கேட்கவேண்டுமா! அந்த வாலிபனை அப்படியே விழுங்கி ஏப்பம் விட்டுவிடலாமா என்றும் தோன்றியது. அதோடுமனிதசுபாவத்தின் குஜோத்யகுணத்தின்படி அந்த யுவன்மீதும் நித்யாவின்மீதும் ஒரு களங்கமான சந்தேகமும் உண்டாகியதால் உடம்பு முற்றும் பற்றி எரிவதுபோலிருந்தது.

தன்னுடைய கௌரவத்தையும், உத்யோகத்தையும் உத்தேசித்து இந்த விஷயத்தை பகிரங்கப்படுத்தாது அம்மட்டுடன் அடக்கிவிட்டான். ஆனால் முத்துகிருஷ்ணனுக்கும் கோபுவுக்கும் எந்த விதத்தில் படுகுழி தோண்டலாம் என்கிற சதியான எண்ணம்

மட்டும் இதயத்தில் ஒரு மூலையில் பதிந்துவிட்டது. அந்த ஆத்திரம் மட்டும் தீரவே இல்லை.

ஊர் ஜனங்களின் வார்த்தைக்குக் கேட்கவேண்டுமா! எங்காவது துளி விஷயம் கிடைத்துவிட்டால் அதை ப்ரமாதமாகக் கோட்டை கட்டும் சாமர்த்தியத்தில் சிறந்தவர்கள். இந்த குட்டிச் சண்டையும், ரகஸியமும் எப்படியோ குசமச என்று அந்த கிராமம் பூராவும் எட்டிவிட்டது.

"என்ன ஆச்சரியமடியம்மா! மன்மதனொட்டும் இருக்கும் பையனைப் பார்த்து கண்டிப்பாய் மாட்டேனென்று சொல்லிவிட்டாளாமே! இந்தக் கலிகாலத்தில் இப்படிகூட சொல்கிறவர்கள் உண்டா! சின்ன பிள்ளைக்குக் கொடுக்கும் கல்யாணமானாலே முகூர்த்தவேளையில்கூட நின்று விடுவதை நாம் கண்ணால் பார்க்கிறோம். கிழவனுக்கு வாக்குக் கொடுத்ததற்காக ஒரு பெண் இப்படிச் சொல்லுமா! இது வியப்பிலும் வியப்பு" என்று அன்றைய தினமே ஆற்றங்கரையிலும் கோயிலிலும் வார்த்தைகள் கிளம்பின.

அன்று பொழுதுபோக மறுதினம் அதிகாலையிலேயே முகூர்த்த மாதலால் காரியங்கள் வெகு துரிதமாக நடந்தேறின. குப்பம்மாள் மருமகளின் அழகைக் கண்டு மோகித்து பெட்டியிலிருந்த தலை சாமான்முதல் சகல நகைகளையும் எடுத்து நாட்டுப் பெண்ணுக்கு ஸ்ரீமதி சம்பகத்தம்மாள் திருக்கரத்தினால் அலங்கரிக்கச் செய்தாள்.

கல்யாணமாவதற்கு முன்பு சற்று கோரமாகவிருக்கும் பெண்களுக்குக்கூட கல்யாணத்தின்போது ஒருபுதிய களையும், தேஜஸும் உண்டாகிவிடுகிற வழக்கம். அதிலும் அழகே உருவெடுத்தார் போல் ப்ரகாசிக்கும் நித்யாவுக்கு இந்த அலங்காரங்களையும் செய்த பிறகு சாக்ஷாத் ரதி தேவியேபோல் விளங்கினாள். அவள் முகத்தில் எவ்விதமான வித்யாஸமும் தோன்றாது வெகு சகஜமாகவே காணப்பட்டதைக்கண்ட கல்யாணப்பந்தலிலுள்ள ஜனங்களின் ஆச்சரியம் கரைபுரண்டது.

"இந்த சுந்தரவதனிக்குத் தக்க வரன் இது" என்று ஒவ்வொருவரும் ஆண் பெண்ணடங்க வியப்புக்குறியுடன் பேசிக்கொண்டார்கள். ஹரிஹரனின் குழந்தை அவனைவிடாமல் காலைக்கட்டிக் கொண்டே நின்றது. குறித்த சுபவேளையில் சுப முகூர்த்தத்தில் கல்யாணமுகூர்த்தம் நடந்தேறியது. எல்லோரும் "தீர்க்கசுமங்கலீ பவ"...என்று தம்பதிகளை ஆசீர்வாதஞ்செய்து அக்ஷதையும் புஷ்பமும் தூவினார்கள்.

தாலியைக் கட்டும்போது சபையிலேயே ஒரு பரபரப்பு உண்டாகியது. அந்தகனாகிய திருமூர்த்தியின் கண்களில் ஆனந்தபாஷ்பம் பெருகுகின்றது. நித்யாவின் கண்களில் ஒரு தனி சோபை பளிச்சென்று ப்ரகாசித்தது. அதே சமயம் கோபு வீதியிலேயே நின்று இந்த விவாகத்தைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டவாறு ஒரே விசை

யாகப்போய்விட்டான். எங்கே போனானென்று யாருக்குத்தெரியும்.

ஒரேதினத்து விவாகம் வெகு சங்கிரகமாகநடந்தேறியாயிற்று. மறுதினமே நித்யாவின் பெற்றோர்கள், சகோதரன் உள்பட இரண்டு மூன்று கார்களில் ஹரிஹரனின் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். தம்பதிகளைப் பார்க்க அந்த வீதியிலுள்ள எல்லோரும் தம்தம் வீட்டில் கும்பலாகக்கூடி நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

நித்யாவின் திவ்யமங்கள ரூபத்தையும் ஹரிஹரனையும் கண்டு ஒரு நெடுமூச்செறிந்து அனுதாபத்தையே காட்டினார்கள். ஒவ்வொருவராய் கல்யாணம் விசாரிக்க வந்தார்கள். குப்பம்மாள் பெருமிதமான சந்தோஷத்துடன் மருமகளைக் காட்டினாள். நமஸ்கரிக்கச் செய்தாள். ப்ரமாதமாகப் பேசினாள். தடபுடல் நடந்தது. சுதாமதி நித்யாவை விட்டு அப்புறம் இப்புறம்கூடப் போகவே இல்லை.

'சித்தீ!' என்றுகூடக் கூப்பிடாமல் "அம்மா! அம்மா!" என்றே தாமுவும், சுதாவும் கூப்பிடவாரம்பித்தார்கள். முதன்முதல் மருமகள் வந்த ஜோரில் குப்பம்மாள் நித்யாவையும் அவளுடைய பெற்றோர்களையும் நடத்தும் விமரிசையைக் கூறவேமுடியாது. 'நித்யா நடந்தால் தேய்ந்துவிடும்;நின்றால் தேய்ந்துவிடும்'என்றுகூடகூறினாள்.

தன் மகளால் தங்களுக்கும், தம் மக்களுக்கும் கிடைத்துள்ள போகபாக்யத்தைக் கண்டு ஞானம்பாளின் உள்ளம் பூரித்தது. "கிழவனானால் என்ன ப்ரமாதம்! எத்தனை சுகம்? ஆட்களென்ன? மோட்டார் என்ன? பங்களாவென்ன, பெரிய தோட்டமென்ன, உத்யோக கம்பீரமென்ன? இவைகளெல்லாம் எத்தனை அழகாயிருக்கு?" என்றுகூட அன்னையின் இதயம் எண்ணி இன்புற்றது.

ஒன்றிரண்டு மாதங்கள் சென்றன. உத்யோக நிமித்தம் வேலையாகவரும் மனிதர்களிடம் குப்பம்மாள், ஹரிஹரன், குழந்தைகள் முதல் லஞ்சம் வாங்கும் அபாரமான திருப்பணியைப் பார்க்க நித்யாவுக்கு கொஞ்சங்கூடப் பிடிக்கவேயில்லை. "மகா கொடிய பாதகத்தில் ஒன்றாகிய லஞ்சம் வாங்கும் முறையில் ஈடுபட்டதனால்தான் இத்தனை சொத்துக்களுக்கு அதிபதியாகியிருக்கிறார்கள்" என்கிற ரகஸியம் நன்றாகத் தெரிந்துவிட்டது.

182055

ஹரிஹரனிடம் காரியமாக வரும் ஒவ்வொருவரையும் ஸ்ரீமதி குப்பம்மாளே முதன்முதல் மடக்கி யோகக்ஷேமங்கள் விசாரித்து அந்த மனிதனால் என்ன கொடுக்கமுடியும் என்று வார்த்தைப்போக்கில் தெரிந்துகொள்வதில் அவளைப் போன்ற சாமர்த்தியம் உலகத்திலேயே இல்லை. ஒன்றிற்கும் உதவாத பிறண்டை கிடைப்பதாயினும் அதைக்கூட விடமாட்டாள்.

'பாழும் பிறண்டையை என்ன செய்வது' என்று ஒருபோதும் குப்பம்மாள் தியங்கியதே கிடையாது. ஒரு வண்டி பிறண்டை வந்தாலும் சந்தோஷத்துடன் வரவேற்று அப்பளம்செய்வது,பிறண்டை வத்தல் போடுவது. பிறண்டை துவையல் செய்வது இதுபோல் பல

உருவங்களாகத் தனக்கு வேண்டிய அளவு மாற்றிக்கொள்வதோடு விடாமல் கூடைக்காரியிடம் விற்பனைக்குத் தயார்செய்துவிடுவாள்.

அண்டை அயலிலுள்ள பெண்டுகளுக்குத் தூபம்போட்டுப் பிறண்டையைப்பற்றி ஒரு குட்டி ப்ரஸங்கம் செய்வாள். அதாவது, பிறண்டையைச் சூரணம்செய்து வைத்துக்கொண்டு நாலு நாட்களுக்கொருதரம் குழந்தைகளுக்குப் போட்டினுல் உடம்புக்கு வெகு நல்லதாகவிருக்கும். ஜீரண சக்தியையும் வயிற்றில் மப்புதட்டாத ஆரோக்யத்தையும் கொடுக்கும். ஆதலால் ஓரணுவுக்கு நல்ல பிறண்டையாக எங்கவீட்டு வேலைக்காரியை வாங்கிவந்து தரச்சொல்கிறேன். அதைச் செய்து வைத்துக்கொள்ளு'' என்பாள்.

வேலைக்காரியின்மூலம் இம்மாதிரி ஒரு சிறிய வியாபாரத்தையும் வெகு சாமர்த்தியமாக நடத்துவாள். கேடுகெட்ட பிறண்டைக்கே இத்தனை மகத்துவத்தை ச்ருஷ்டிக்கும் குப்பம்மாள் நல்ல உயர்ந்த ஜாதி மாம்பழங்கள், மற்ற பழவகைகள், தானியவகைகள், காய்கரி வகைகள், துணிமணி, வகைகள் முதலியன கிடைத்தால் சும்மா விடுவாளா !

எந்தெந்த ஊர் ஆசாமி என்பதை யறிந்து அந்தந்த ஊரில் கிடைக்கும் மலிவான சரக்குகளை அவர்கள் மூலம் வரவழைத்து ரகஸிய வியாபாரங்கூடச் செய்துவருகிறுள் என்ருல் வேறு கேட்க வேண்டுமா? ஒரு சுமை புல் கிடைத்தாலும் உபயோகப்படுத்தும் கெட்டிக்காரி. "பழஞ்சேரி" என்கிற ஊரிலிருந்து வரும் ஆட்கள் கிடைத்துவிட்டாலோ, அம்மாள் அவர்களைக் கறவைமாடுபோல் கறந்துகொண்டுவிடுவாளேயன்றி சாமான்யமாக விடமாட்டாள்.

பட்டுச்சேலைகள், தோவதிகள், கடிகாரம், வைரம், வெள்ளி முதலிய பலவிதமான சாமான்களை வாங்கி வியாபாரம் செய்து ஒன்றுக்கு 5 லாபம் சம்பாதித்ததிலேயே ஒருதனி வீடு வாங்கி மாதம் 50 ரூபாய் குடிக்கூலி வரும்படியாகச் செய்துகொண்டாள். இந்த புண்யவதியின் உபத்திரவத்தினுல் சாமான்கள் வாங்கிக்கொடுக்கும் ஆசாமி ஆபத்தில்அகப்பட்டுக்கொண்டுதண்டனையுமடையநேர்ந்தது.

நித்யா வீட்டிற்கு வந்தபிறகு ஒவ்வொன்ருக இந்த விஷயங்கள் தெரிந்து மிகவும் வருத்தமுற்ருள். சுதாமதியும், தர்முவும் கூடக் கையேந்தி வாங்குவதைக் கண்ட நித்யா "சிறு குழந்தையின் புத்தி கூடக் கெட்டுவிடுகிறதே. என்ன செய்வது?'' என்று வருத்தம் உண்டாகியது. வீட்டில் எல்லோரிடமும் குடிகொண்டிருக்கும் இந்த துர்ப்பழக்கத்தை எப்படி வேரறுக்கலாம் என்கிற விஷயத்திலேயே மனது லயித்தது. ஹரிஹரன் உண்மையில் தன்மோகத்தில் மூழ்கிப் பல்லைப் பிளந்துகொண்டேயிருப்பதும், சதா தன் பின்னுலேயே சுற்றுவதும் நித்யாவுக்குச் சற்றும் பிடிக்கவே இல்லை.

சுதாவையும் தர்முவையும் நித்யா தன் பக்கலிலேயே படுக்க வைத்துக்கொண்டு கதைசொல்வதும், வேடிக்கையாக விடுகதைகள்

சொல்லி, பொழுதைப் போக்குவதுமாக விருப்பது ஹரிஹரனுக்குப் பிடிக்கவில்லை. எந்த நேரம் பார்த்தாலும் இந்த சனிகளுடனேயே மாரடித்தால் "உனக்கு உடம்புக்கு ஆகாது. அம்மாவிடம் அவைகளைத் தள்ளிவிடு" என்று தலைகால் தெரியாத கோபத்துடன் கர்ஜிப்பதைக் கேட்க நித்யாவுக்கு அபாரமான எரிச்சல் உண்டாகும். "குழந்தைகளை ஏன் திட்டவேண்டும்? அவைகளை நான் விடமாட்டேன். இதற்காக இத்தனை கோபமா?" என்று நித்யா தைரியமாய் சமாதானம் சொல்வாள்.

## 10

"அம்மா! இதோ பாத்தியா! பழஞ்சேரி மாமா இந்த புடவைகள் கொண்டுவந்திருக்கிறார். அங்கு இவைகள் வெகு நயமாம். அதோடு அப்பாகிட்டே அவருக்கு வேலை நிறைய ஆகவேண்டுமாம். அதற்காக இதுபோல் ஏராளமாகக் கொண்டு வந்து கொடுப்பார். பாட்டி இவைகளை ரகஸியமாக வித்துவிடுவா. இந்ததரம் விற்கவேண்டாம்; நீயும் நானும் கட்டிக்கொள்ளலாம். இது உனக்குப் பிடிக்கிறதாம்மா?" என்று 2, 3 புடவைகளைக்காட்டினாள்.

இதைக்கண்ட நித்யாவுக்கு வெறுப்பும் எரிச்சலும் உண்டாயிற்று. சுதாவிடம் அவளுக்கிருக்கும் அன்பிற்கு அளவே இல்லை. அவளைக் கடிந்து பேசவும் மனம் வரவில்லை. சிரித்துக்கொண்டே, "சுதா! இதை நான் விரலால்கூடத் தொடமாட்டேன். பிறத்தியாரின் சொத்துக்களை நாம் திருடுவதற்குச் சமமாக உபயோகப் படுத்தலாமா! எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. நாங்கள் ஏழையானால்கூட பிறர் சொத்தைத் தொட்டதேயில்லை; அது மகாபாவம்.

சுதா:—(இடைமறுத்து) ஐயையோ! இதை நான் திருடவில்லையம்மா! அவரே கொடுத்தால் ஏன் வாங்கக்கூடாது? அதகூடவா தப்பு? தினம் எங்க பாட்டி வாங்கறாளே!

நித்யா:—அவர்களுக்கும் நமக்கும் சம்மந்தமில்லாமல் அந்த சொத்து நமக்கெதற்கு? நீயே சொல்லு பார்க்கலாம். உன்னுடைய பாவாடையை எதிர்வீட்டுக் கல்யாணிக்கு நான் எடுத்துக்கொடுத்து விட்டால் உனக்குச்சம்மதமாயிருக்குமா! ஏதோபாவம்! ஏழையாயின் போனால்போகிறதெனலாம். இல்லையா! நீ ஏழையா பணக்காரியா!

சுதா:—நாம் ஏழையே இல்லையே! கார் முதற்கொண்டுஇருக்கே பணக்காரர்தான். பிறர்சொத்து வாங்கினால் என்னவரும்மா?

நித்:—இந்தமாதிரி வாங்குவதற்கு லஞ்சம் என்று பெயர். நாம் சில காரியங்களைச் செய்யவேண்டிய கடமையில் செய்யவேண்டும். அதற்காக லஞ்சம் வாங்கலாமா! சமையல்காரனை நாம் நியமிக்கிறோம். அவனுக்குப் பணங்கொடுப்பதால் வேலை செய்யக்கடமைப்பட்டிருக்கிறான். நம்ம வீட்டிற்குவரும் விருந்தாளிகளிடம் 'நீங்கள் பணம் கொடுத்தால்தான் உங்களுக்குச் செய்வேன்'என்று அவன் சொல்லி நமக்குத் தெரியாமல் அவர்களிடம் பணம் வாங்கிக் கொள்ளலாமா!



சுதா :—ஐயையோ! அப்படி வாங்கினால் நமக்குத்தானே அவமானம். வருகிறவர்களுக்கும் கோபம் வருமே. நம்மிடம் மதிப்புக்கூட குறைந்துவிடுமே!....

நித்:—நீ நல்ல கெட்டிக்காரி; சமத்து. உனக்குச் சடக்கென்று தெரிந்துவிட்டது பார்த்தாயா! சர்க்கார் உங்கப்பாவுக்கு சம்பளங் கொடுத்து வேலையில் வைத்திருக்கையில் இப்படி பிறரிடமிருந்து பணம் வாங்குவது தர்மமா? அது பாவமில்லையா! கடவுளுக்குக் கோபம் வராதா!

சுதா:—ஆமாம். நீ சொல்வது ரொம்ப சரிதான் அம்மா! முன்னே எங்கசினேகிதி ஒருத்தி இருந்தாள். அவளுடைய அப்பா ஓயாமல் லஞ்சம் வாங்கினது சர்க்காருக்குத் தெரிந்துவிட்டதால் வேலை போய், ஜெயிலுக்குக்கூடபோனதா பாட்டிதான்சொல்லியிருக்கா!

நித்ய:—உங்க பாட்டிக்கு இது தெரிந்துகூடவா இம்மாதிரி லஞ்சம் தான் வாங்கவும் துணிந்ததோடு, உன்னையும் பழக்கிப் பாழாக்குகிறாள்" என்று சொல்லும்போது இதைக் கேட்டுக்கொண்டே ஸ்ரீமதி குப்பம்மாள் அவ்வறையின் வாசற்படியில் வியப்பும் கோபமும் கலந்த குறியுடன் ஒரு கையை மோவாக்கட்டையில் வைத்துக்கொண்டு, மற்றொரு கையை இடுப்பில் வைத்துக்கொண்டு நின்றாள். இதை நித்யாவோ, சுதாவோ பார்க்கவில்லை.

கிழவிக்கு இந்த வார்த்தையைக் கேட்டதும் மருமகள்மீது கோபமும், ஆத்திரமும் உண்டாகியதால் 'அடி சுதா!...தடிமரமே!

இங்கு என்ன செய்கிறாய்!' என்று ஒரு அதட்டுப்போட்டாள். சுதா புடவைகளுடன் பாட்டியிடம் ஓடிவந்து, "ஏம்பாட்டீ! இதெல்லாம் லஞ்சம் வாங்குகிற சொத்தாமே...நாம்ப வாங்கலாமோ?" என்று கேட்டாள்.

கிழவிக்கு மெல்லவும் முடியவில்லை; விழுங்கவும் முடியவில்லை. புதிய மருமகளை ஏதாவது சொன்னால் மகனுக்குக் கோபம் வந்தாலும் வரும்; ஆதலால் இந்த தரம் இப்படியே இதை அடக்கி விட வேண்டுமென்று எண்ணியவளாய் சுதாவின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டுபோனாள். தனக்கு மிகவும் அனுகூலமான மருமகளாக விருப்பாளென்று எண்ணியதற்கு நேர்விரோதமாக விருப்பதைக் கண்டு, குப்பம்மாளின் இதய ஏட்டில் மருமகள்



மீது ஒரு சிறுபுள்ளி விழுந்தது.

நித்யாவோ இதைச் சிறிதும் லக்ஷியம் செய்யாமல் தன் கையிலுள்ள துணியில் அழகிய பூப்போடுவதில் நாட்டமாயிருந்தாள். அந்த வேலையை அன்று முடித்து சொக்காயைத் தைத்து மறுநாள் சுதாவுக்குப் போட்டு பள்ளிக்கூடத்தில் நடக்கும், "பெற்ருேர்களின் தினத்திற்கு" அனுப்பவேண்டுமென்பது நித்யாவின் பேரவா. அதனல் அதையே வெகு வேகமாகத் தைத்துக்கொண்டிருந்தாள்.

அச்சமயம் ஹரிஹரன் அங்குவந்து "இதென்னது?" என்ருன். 'குழந்தை சுதாவுக்கு சொக்காய் தைக்கிறேன். நாளைக்கு பள்ளிக்கூடத்தில் பெற்ருேர்களின் தினமாம்; அதற்கு புதியமாதிரியில் போட்டுஅனுப்பினல் அழகாக இருக்கும். அதோடு அவள்நாளைக்குப் பாடப்போகிருள். அப்போது அலங்காரமாக இருக்கவேண்டாமா?' என்று சுதாவினிடமுள்ள அன்பு ததும்பக்கேட்டாள்.

ஹரி:—எந்த நேரம் பார்த்தாலும் 'ஸுதாவுக்குச் சொக்காய் தைக்கிறேன். தர்முவுக்குப் பாவாடை தைக்கிறேன்' என்று உடம்பை அலட்டிக்கொள்கிருயே! உன் உடம்புக்கு ஆகுமா! இந்த சிங்காரங்களெல்லாம் எதற்கு? காசை வீசி எறிந்தால் தையற்காரன் தைத்துக்கொடுத்துவிட்டுப் போகிருன். நீ என் கண்ணைக் கெடுத்துக்கொள்ளவேண்டும்? இதோ பாரு, நித்யா! எந்த வேளையும் அந்த பசங்களுடனேயே விளையாடியும் அவர்களுக்குழைத்தும் பொழுதைப் போக்குவது எனக்குச் சற்றும் பிடிக்கவே இல்லை. நீ என் உழைக்கவேண்டும்? வீட்டில் எத்தனை வேலைக்காரர்கள் இருக்கிருர்கள்? அவர்கள் செய்யட்டுமே!

இதைக் கேட்டவுடனே நித்யாவுக்கு அடக்கமுடியாத ஒரு சிரிப்பு கலகலவென்று வெளிப்பட்டது. அதற்குமேல் எதுவும் பேசவில்லை. இச்சிரிப்பு ஹரிஹரனின் மண்டையில் அடித்ததுபோல் தோன்றியது. "இதென்ன சிரிப்பு நித்யா?" என்ருன்.

நித்:—மனித சுபாவத்திற்குச் சிரிப்பது வெகு சகஜந்தானே! இதில் வியப்பென்ன இருக்கிறது?

ஹரி:—ஒகோ! அப்படியா சமாச்சாரம்? எனக்கு இது பரியந்தம் இந்த மானிட தத்வம் தெரியாது. அதனல் கேட்டேன். சரி! அது கிடக்கட்டும். எனக்கு கொஞ்ச நாளைக்கு எங்கேனும் வெளியூருக்குப் போயிருக்கவேண்டுமென்று ஆவலாயிருக்கிறது. ஆறு மாதத்து லீவுக்குமேல் எனக்கு இருக்கிறது. முதலில் மூன்று மாதத்திற்கு எழுதிப்போட்டேன். அதற்கு நேற்றுதான் உத்தரவு கிடைத்தது. எந்த ஊருக்குப் போகலாம்? உன்னிஷ்டத்தைச் சொல்லு.

நித்:—எனக்குக்கூட பரம சந்தோஷம். நல்ல அருமையான மலை ப்ரதேசத்திற்குப் போகலாம்...என் திருக்கழுக்குன்றத்திற்குப் போகலாமே! நல்ல ஆரோக்யமான ஊர் ஸ்வாமி தரிசனமும், மலை ப்ரதக்ஷணமும், நல்ல பக்ஷிதீர்த்தமும் உள்ளஊர் அதற்கேபோகலாம்.

ஹரி:—சேச்சே! போயும் போயும் இம்மாதிரி ஊருக்குப் போவதாவது? ஸ்வாமியுமாச்சு, பூதமுமாச்சு. தினம் தொண தொணவென்று கொட்டுமேளமும், ஜனக்கூட்டமும், யாருக்கு வேண்டும்? நிச்சிந்தையாய் ஆனந்தமாய் காலங்கழிக்க இயற்கை யழகு மிகுந்த இடங்களுக்குப்போனல் சந்தோஷமாயிருக்கும். கோயிலும் குளமும் என்னவேண்டியிருக்கு? கிழமா, கிட்டா! விரக்தியும் பக்தியும் பிறந்துவிட்டதா என்ன! இப்போதுமுதல் அவைகள் எதற்கு?....

இதைக் கேட்டதும் நித்யா மீண்டும் முன்னைவிட அதிகமாய் கலகலவென்று நகைத்தாள். ஒருமாதிரியாய் பார்த்துக்கொண்டே "ஆம்...நாம் இப்போதுதான் இந்த இன்ப உலகத்தில் பிறந்திருக் கிறோம். ஆனந்த வாழ்க்கையின் அருணோதயத்தைக் காண்கிறோம். சிங்கார வனத்தின் சிறப்பில் முழ்குகிறோம். அல்லவா! இப்போது முதல் பக்தியும், பகவானும் எதற்கு? நாம் இப்போதுள்ள இதே நிலேதான் நமக்குச் சாச்வதமாயிற்றே! ஆகையால் இதேயல்லவா வைகுண்டம், கைலாயம் என்று இருப்பதை விட்டு வேறு வழியில் செல்வார்களா என்ன! அதெல்லாம் தப்பான மார்க்கமல்லவா! இந்த தத்துவத்தின் அதியற்புதமான ரகஸ்யத்தை அறியாமல் பயித் தியக்காரத்தனமாய், பக்தர்களெல்லாம் அக்காலத்தில்,

க்ருஷ்ண! த்வதீய பதபங்கஜ பஞ்ஜராந்த:
மத்யைவ மே விசது மானஸ ராஜஹம்ஸ:
ப்ராண ப்ரயாண ஸமயே கபவாத பித்தை:
கண்டாவரோ தநவிதென ஸ்மரணம் குதஸ்தே!

—முகுந்தமாலே.

துப்புடையாரை அடைவது எல்லாம்
சோர்விடத்துத் துணையாவரென்றே
ஒப்பிலேனாகிலும் நின்னடைந்தேன்
ஆனைக்கு நீ அருள் செய்தமையால்
எய்ப்பு என்னை வந்து நலியும்போது
அங்கு ஏதும் நானுன்னை நினைக்க மாட்டேன்
அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன்
அரங்கத்தரவணைப் பள்ளியானே!

—பெரியாழ்வார்.

என்ற பாடல்களையெல்லாம் பாடியிருக்கிறார்கள்...

என்று கூறுவதைக்கேட்ட ஹரிஹரனுக்குக் கோபம் தாங்கவே முடியவில்லை. வள்ளென்று சீறி விழுந்தவாறு, "போரும். உன் னுடைய பிரஸங்கமும், பாட்டும், கூத்தும். இதென்ன ஹரிகதையா? நாடகமா! ஏதேது! கொஞ்சங்கூட பயங் கூச்சமே இல்லை. தலை கிறுக்கு அதிகமாகிவிட்டது....உன்னை என்ன யோசனை கேட்பது? நாளை இரவு வண்டிக்குத் தயாராக இரு. பூஞ்சேரிக்குப்போய் மூன்று

மாதம் இருந்துவரலாம்'' என்று கூறியவாறு போய்விட்டான்.

நித்யாவுக்குக் கோபமும் வரவில்லை; சந்தோஷமும் உண்டாக வில்லை. தன் வேலையில் கவனமாகவிருந்து மறுநாளே சுதாவுக்குப் போடுவதற்கான சொக்காயைத் தைத்துமுடித்தாள். வெகுமேன்மை யான முறையில் சுதாவை அலங்கரித்து தான் சொல்லிக்கொடுத் திருந்த பாட்டைப் பாடச்செய்து சரியாயிருப்பதைக்கேட்டுச் சந் தோஷப்பட்டு மற்ற குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு கிளம் பினாள். பெற்றோர்களின் தினமாகையினால் ஹரிஹரனும் ஆடம்பர மாக அலங்கரித்துக்கொண்டுவந்தான்.

பள்ளிக்கூடத்தில் விழா வெகு அழகாகக் கொண்டாடப் பட்டது. சுதா வெகு நன்றாகப் பாடினாள் என்பதற்காக ஒரு வெள் ளிக்கோப்பைப் பரிசு கொடுத்தார்கள். இதைக்காண நித்யாவின் இதயம் பொங்கிப் பூரித்தது. அன்பின் மிகுதியால் ஸுதாவைச் சேர்த்தணைத்து அங்கேயே முத்தமிட்டாள். மாற்றாந்தாயின் அபரி மிதமான அன்பைக்கண்டு அந்தபள்ளிக்கூடத்துஉபாத்தியாயினிகள் ஆச்சரியப்பட்டனர். பிறகு எல்லோரும் வீடுவந்து சேர்ந்தார்கள்.

## 11

“ஸுதா! உன் புத்தகங்களெல்லாம் எடுத்துக்கொண்டாயா! இந்த பாவாடைபோதுமல்லவா?'' என்று நித்யா வெகு அன்புடன் கேட்டாள். ஸுதாவும் வெகு ஆசையுடன் மூட்டைகள் கட்ட நித்யாவுக்கு உதவியாகவிருந்தாள். நித்யா, ஸுதாவின் அண்ண னாகிய யாதவனை அழைத்து, 'யாதவ்! நீயும் இந்த 15 நாளைய லீவுக்கு அங்குவந்து தார்முவுடன் இருந்துவிட்டு வரலாம். கிளம்பு' என்றாள்.

எப்போதும் முடுக்காகப் பேசுவதும், கர்வம் பிடித்துப் பார்ப்பதும் யாதவனுடைய சுபாவமாகிவிட்டது. அவன் தாயார் இருக்கும்பொழுதே அவளுக்குக்கூட அவன் அடங்கமாட்டான். எந்த நேரமும் நாலு பசங்களுடன் சேர்ந்துகொண்டு ஊர் சுற்று வதும் ஒட்டலில் வேலைகெட்ட வேலைகளில்கூட நுழைந்து சினே கிதர்களுடன் தின்பதும், வெகு சிறு வயதிலிருந்தே சினிமா பார்ப் பதும், சரியாகப் படிக்காமல் பள்ளிக்கூடங்கூடப் போகாமல் ஒவ் வொரு வருஷமும் பரீக்ஷையில் தோல்வியடைவதும், தகப்பனார் சில சமயம் சிபார்சு செய்து மேல் கிளாஸுக்குத் தூக்கிப்போடுவது மான லீலைகள் வேண்டியபடி இருந்தது. அது இப்போதுமட்டும் விட்டுவிடுமா!

அவன் தாயார் இருந்தவரையில் 'நீ எப்படியடா உருப்படப்

போகிறாய்? உன் முட்டாள்தனத்தைப் பார்த்தால் நீ உன் தந்தையின் பதவிக்கு அருகில்கூட நிற்கமாட்டாய்போலிருக்கிறதே!' என்று அடிக்கடி முட்டிக்கொள்வாள். தாயின் சொல்லுக்குள்ள மகிமையையும், தாயின் இதயத்திலிருந்து பொங்கிஎழும் அன்பின் உணர்ச்சியையும் இந்த மூடன் எங்ஙனமறியக்கூடும். லக்ஷ்யமே செய்யாது தத்தாரிபோலிருந்தான். தாயாரும் தொலைந்துவிட்டபிறகு பின்னும் சந்தோஷமாகிவிட்டது.

பாட்டியின் லஞ்சம் வாங்கும் அபாரமான குணத்தின் அழகை நன்றாகக் கண்டிருக்கிறானதலால் அவளிடம் அதிகமான சலுகை காட்டி அவளை நன்றாகக் காக்காய்பிடித்திருந்ததால் அவளிடமிருந்து அடிக்கடி பணத்தைப் பறிப்பதில் வெகு கெட்டிக்காரனாக இருந்தான். பாட்டி ஒரு சமயம் கொடுத்து ஒரு சமயம் கொடுக்க மறுத்தால் உடனே பையன் மரணமென்கிற பாணத்தைப் பாட்டியின் மீது பிரயோகம் செய்து 'இதோ இப்போதே குளத்தில் மிதப்பேன்; கிணற்றில் மிதப்பேன்' என்று பூச்சி காட்டுவான். மூன்று நாட்களானாலும் வீட்டிற்கு வரமாட்டான்.

பெரியமனிதனின் வீட்டுப்பிள்ளை ஓடிவிட்டதென்றாலும் தற்கொலை செய்துகொண்டு இறந்துவிட்டான் என்றாலும் எத்தனை அவமானம்! அதோடு இத்தனை பெரிய பிள்ளை அனாயாஸ மரணமாய்ச் சாவதற்கு மனமொப்புமா! பெற்றோருக்கும் வளர்த்தோருக்கும் எத்தகைய சங்கடம் செய்யாது? குப்பம்மாள் இந்த பேரனை வளர்க்கும் அருமை அவளுக்கல்லவா தெரியும்.

முரட்டு சுபாவத்தின் வேகத்தில் எங்கே சொன்னபடிச்செய்துவிடுவானோ என்கிற பயத்தில் குப்பம்மாள் பேரப்பிள்ளையின் இஷ்டத்தின்படி கேட்டபோதெல்லாம் காமதேனுவைப்போல் கொடுத்துக்கொண்டே இருப்பாள். அவனுக்கு படிப்பதற்குமட்டும் மூளை இல்லையேயன்றி மற்ற சில்லரை அம்சத்தில் மகா மேதாவி மூளைதான். முதலில் கல்யாணம் செய்துகொண்டு மனைவியுடன் சந்தோஷமாய் தற்கால நாகரீக தம்பதிகளைப்போல் வாழ்க்கை நடத்த வேண்டுமென்று வெகு ஆசை. ஆனால் கிழவன், மகனுடைய விவாகத்தைப்பற்றிச் சிறிதும் கவனிக்காமல், தனக்கு விவாகத்தைச் செய்துகொண்டதுமுதல் தகப்பனார்மீது யாதவனுக்கு அளப்பரிய ஆத்திரமும் வெறுப்பும் உண்டாயின. அதனால் தகப்பனாருடன் பேசுவதையே நிறுத்திவிட்டான்.

பணக்காரர்வீட்டுப் பிள்ளையானாலும் இவனுக்குப் பெண் கொடுக்க முதலில் தடபுடலாகப் பேசுகிறவர்கள் அருகில் வந்து விசாரித்ததும் தாமே விலகிச் செல்வதைக் குப்பம்மாளால் சகிக்கவே முடியவில்லை. வயது இருபது ஆகியும் மெல்ல நெட்டி நெட்டி S. S. L. C. பாஸ் செய்துவிட்டு F. A. க்குச் சேர்ந்தது ப்ரம்ம ப்ரயத்தனமாகிவிட்டது. இத்தனை லக்ஷணமுள்ள பிள்ளைக்குத் தகப்

னரின் பணத்தைப் பார்த்து பெண்ணைத் தூக்கிக்கொடுக்க யார் முன்வருவார்கள்?

நித்யாவைவிட வயதில் பெரியவனாகவிருப்பினும் அவளைவிட புத்தியில் மகா சிறியவன். நித்யா அவ்வப்போது யாதவனுக்கு வேண்டிய காரியங்களைச் செய்வதும், ஹிதமான வார்த்தைகள் சொல்லி அவன் திருந்தும் வழி செய்வதும், அவனுக்கு நல்ல இடமாகப் பார்த்து விவாகத்தைச் செய்து அவன் நல்ல வழியில் நடக்க வேண்டிய மார்க்கத்தைச் செய்யவும் வெகு ஆவலுள்ளவளாகவிருந்தாள். அவனிடம் வெகு அன்புடன் ஊருக்கு அழைத்ததைக்கேட்ட யாதவ் ஒரு முறைப்பு முறைத்துக்கொண்டு "எந்த ஊருக்கும் நான் வரவில்லை. எனக்காக நீ அழவேண்டாம்" என்று வெடுக்கென்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அவன் சுபாவம் தெரிந்திருப்பதால் நித்யா 'அவனுக்கு நல்ல புத்தியைக் கொடுக்கவேண்டும்' என்று பகவானை ப்ரார்த்தித்தவாறு தன் ப்ரயாணத்திற்குச் சித்தமானாள். ஹரிஹரன் வெளியிலிருந்து வந்ததும் 'நித்யா!...சித்தமாயிருக்கிறாயா!' என்றான்.

'ஓ! எப்போதோ சித்தமாகிவிட்டேன்' என்றதும், 'ட்ரைவர்! சாமான்களை வண்டியில் ஏற்று' என்று ஆக்ஞையிட்டார். சுமார் 7, 8 பெட்டிகள், 4, 5 படுக்கைகள், இரண்டு கோணிமூட்டைகள் முதலிய சாமான்களைப் பார்த்ததும், ட்ரைவர் 'சார்! காரில் பிடிக்காது. தனிவண்டியில்தான் சாமான்களை ஏற்றவேண்டும்' என்றான்.

இதைக் கேட்ட ஹரிஹரன், 'என்ன! தனி வண்டிவேண்டுமா! அத்தனை சாமான்கள் ஏது?' என்று கூறிக்கொண்டே வந்து பார்த்து ப்ரமித்தார். 'நித்யா! இதென்ன சாமான்கள்? வீட்டையே காலி செய்துகொண்டு போவதாக ஏற்பாடா என்ன! எத்தனைபெட்டிகள்? எத்தனை படுக்கைகள்?...இதெல்லாம் என்ன தடபுடல்?' என்றார்.

நித்:—(நகைத்துக்கொண்டே) வீட்டை காலி செய்வதற்கு அத்தனை மூளை கலங்கிவிடவில்லை. எல்லாம் நம்முடைய சாமான்களும் படுக்கைகளுந்தான்.

ஹரி:—இரண்டுபேருக்கா 8 பெட்டியும், 5 படுக்கையும் ரெண்டு கோணி மூட்டையும்...

நித்:—அடாராமா! ரெண்டுபேராவது. குழந்தைகள்...அவர்களின் துணிமணிகள் புத்தகங்கள், படுக்கைகள், பாத்திரசாமான்களெல்லாம் தயார்செய்தேன்....

ஹரி:—நித்யா! நீ செய்வது ஒன்றுமே எனக்குப் பிடிக்கவில்லை. நான் சொல்வதெல்லாம் உனக்கு அலக்ஷியமாகத் தோன்றுகிறதா! இங்கு வாசிக்கும் பசங்களை ஏன் அதைத்தடுத்து இழுத்துச் சென்று பாழடிக்கவேண்டும்? முடியாது. குழந்தைகளுமாச்சு கோட்டான்களுமாச்சு. இந்த சாமான்களைப் போட்டுவிட்டுக் கிளம்பு...தனியாகப்போய் நிம்மதியாக இருக்கவேண்டுமென்றால்

இதென்ன கால்கட்டு ?

நித்யாவின் முகமும் கண்களும் சிவந்தன. புருவம் நெறிந்தது. கிழவனை ஒரு முழி முழித்துப்பார்த்தாள். "நீங்கள் குழந்தைகளைப் பெற்ற அன்புஇதயத்துடன் பேசுகின்றீர்களா! அன்றி வரட்டுக் கட்டைகளைப்போல் பசையற்றுப் பேசுகிறீர்களா ? பெற்ற உள்ளத்தின் வேகம் தங்களிடம் வற்றிவிட்டதா! குழந்தைகளை விட்டுவிட்டு இருவரும் தடிக்கட்டைகளைப்போல் போகவேண்டுமென்று அன்றே என்னிடம் சொல்லியிருந்தால் நான் சம்மதித்தேயிருக்கமாட்டேனே! குழந்தைகள் வரவேண்டாமென்றால் நானும் வரவில்லை.

நீங்கள் பதினாறுவயது பால குமாரன் என்று நினைத்தீர்களா! யாதவன்பெண்ணாய்ப் பிறந்திருந்தால் மாமனாராகிப் பின்னோடு பாட்டனார் என்கிற பதமான பட்டமும் பெற்றிருப்பீர்களே! குழந்தைகளை நாம் அழைத்துச்செல்லாவிட்டால் வேறு யார் அழைத்துச் செல்வார்கள்? இதென்ன அர்த்தமற்ற வார்த்தை?' என்று சற்று வெடுவெடுப்பாகவே கூறி விரைத்து நின்றாள்.

இதற்குள் குழந்தைகளுக்குஅப்பா வேண்டாமென்றுசொல்வது தெரிந்துவிட்டதால், ஸுதா, தர்மு, தர்மராஜ் மூவரும் வந்துநித்யாவைச் சூழ்ந்து அவளைக்கட்டிக்கொண்டு பரிதாபமாக அவள் முகத்தைப் பார்த்தபடியே நின்றார்கள். நித்யா அன்பின் ஆவேசத்துடன் தர்முவைத் தூக்கி இடுப்பில் போட்டுக்கொண்டு முகத்தோடு முகம் பதித்து முதுகில் தடவிக்கொடுத்தாள்.

தர்மு காதுடன் வாய்வைத்து, 'அம்மா! நானு'...என்றது. அதே சமயம் ஸுதாவும், 'அம்மா!...என்னைவிட்டுவிட்டுபோகாதே'என்று ரகஸியமாகக்கூறினாள். நித்யாகண்ணாலேயே இருவருக்கும்சமிக்ஞை காட்டி பதில் கூறினாள்.

ஹரிஹரனுக்கு வந்த ஆத்திரத்தில் நித்யாவைக்கூட நாலறை வைத்துவிடுவான்போலிருந்தது. பல்லைக் கடித்துக்கொண்டு, "தரித்திரத்தின் வயிற்றில் பிறந்தாலுங்கூட தலைக்கிறுக்குக்குப் பஞ்சமில்லை என்று முணுமுணுத்தது, நித்யாவின் காதில் விழுந்தது.

நித்யா சற்றும் தியங்காமல் பேசத்தொடங்கி 'ஆமாம். கடுகு சிறுத்தாலும் காரம்போகாது....ஊசிமிளகாய் வெகு எளியதாகக் காணப்பட்டாலும் பார்ப்பதற்குப் பெரியதாக குடம்குடமாக விருக்கும் குடமிளகாயை விட நூறுபங்கு காரத்தில் சிறந்திருக்கும். தெரியுமா! நான் வீண் அதிகாரம் செய்யவில்லை. என் இன்பக் குழந்தைகளை விட்டு நான் அரைவிநாடி பிரியமாட்டேன். என் வாழ்நாளின் இன்பமே இவர்கள்தான்...

ஹரிஹரன் இடைமறுத்து 'அடாடா என்ன தளுக்கு ? மூத்தாள் குழந்தைகள்மீது இளையாளுக்கு ஆசை பழையமுதில் வைத்த வெண்ணெயைப்போல் உருகி ஒடுகிறது. தயாநிதி பாவம். என்ன இந்திரஜாலம்! என்னநாடகம்!...இப்படி நடிப்பதற்கு எந்த பள்ளியில் படித்

தாய்? ஆடு நனேகிறதென்று ஓநாய் குந்தியழுத கதைபோலிருக்கிறது உன் ஜாலவித்தை. உம்...நீ மட்டும் கிளம்பிவரப்போகிருயா இல்லையா!" என்று அதட்டினுன்.

நித்யாவுக்கு உண்மையில் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டு வந்தது. அவளால் தடுக்கமுடியாது கண்களில் நீர் பலபல வென்று வந்து கீழே நிற்கும் ஸுதாவின் தலைமீதும் கன்னத்திலும் சுறீரென்று சொட்டியது. துள்ளிக் குதித்தவள்போல் சடக்கென்று நிமிர்ந்து நித்யாவின் முகத்தைப்பார்த்தாள். ஆனல் பதில்பேசவோ, தகப்பனரிடம் கெஞ்சவோ அஞ்சினுள்.

"குழந்தைகளைப் பிரியத் துணிவதா! கணவனுக்கு விரோதமாக நடந்து கோபத்தை உண்டாக்குவதா! இதில் எந்த செய்கை மிகவும் பாவமானது?"...நாமே மனமுவந்து செய்துகொண்ட காரியத்தில் பிறர் மனத்திற்கு வருத்தத்தை உண்டுபண்ணுவது சரியில்லை. நம் தலைவிதியின்படிதானே யாவும் நடக்கும். பிடிவாதமும் மனஸ்தாபமும் கொண்டால் என்னலாபம்? பழய அமுதில் வைத்த வெண்ணெயைப்போல் உருகுகிறேன் என்று இவர் மனதாரச் சொன்னல் சொல்லட்டும். ஒரு தனிப்பட்ட மனிதருக்காக நான் என் ஆத்மார்த்தகமான ப்ரீதியைச் செலுத்தவில்லை. எங்கும் நிறைந்த இறைவனின் பாத சாக்ஷியாக நான் மாசிலாத அன்புடன் நடந்துகொண்டால் போதும். அந்த பரம்பொருளின் இதயத்திற்கு என்னுடைய தூய இதயத்தின் ப்ரேமை தெரிந்தால்போதும். என்னை நான் தயாநிதி என்று கனவிலும் கருதவில்லை. உலகத்திற்கெல்லாம் தயையைக் காட்டும் தயாநிதியின் அருளுக்கு நான் பாத்திரமானல்போதும்" என்று மனத்திற்குள் பொங்கிக் குமுறினுள்.

ஸுதா ஏற்கெனவே நன்ருகத் தெரிந்த விவேகி; சூக்ஷ்ம புத்தியுடையவள். தகப்பனரின் பிடிவாதகுணமும் கோபமும் நன்ருகத் தெரிந்தவள். நித்யா படும் வேதனையை நன்கறிந்தாள். உடனே தான் அவளைக் கட்டியிருந்த பிடியைவிட்டு விலகினுள். தன்னுடையவும், தங்கை, தம்பி உடைய சாமான்களை வேருகப் பிரித்துவைத்தாள். நித்யா இடுப்பிலிருந்த தர்முவைத் தான் பிடுங்கி தன்னிடுப்பில் எடுத்துக்கொண்டாள். தம்பியைக் கையில் பிடித்துக்கொண்டு "அம்மா!...நீ அழாதே. அப்பாவுக்குக்கோபம் அதிகம்...எங்கம்மாவைக்கூட இப்படித்தான் மிரட்டி அடிக்கக்கூட அடித்து விடுவார். நீ மட்டும் போய் வா" என்று துல்யமான ப்ரேமையுடன் கூறிவிட்டு, அழும் குழந்தைகளுடன் உள்ளே போய்விட்டாள்.

கண்ணீர் வழிய நிற்கும் பதுமைபோல் நித்யா அசையாது நின்ருள். என்ன பதில் சொல்வதென்றே தெரியாது தாமரையிலை நீர்த்துளிபோல் தத்தளித்தாள். ஊமையைப்போல் வாயடைத்தது. இதற்குள் ஹரிஹரன் நித்யாவின் பெட்டி படுக்கை, தன்னுடையவை இவைகளை மட்டும் காரில் வைக்கச் சொன்னுன். "அம்மா! நான்

போய்வருகிறேன். பசங்களைப் பார்த்துக்கொள்'' என்று கூறியவாறு நித்யாவை ''உம்...கிளம்பு''...என்றான்.

நித்யா யாரிடமும் சொல்லிக்கொள்ளவே இல்லை. முடுக்கி விட்ட எந்திரம்போல் உள்ளே ஓடினாள். மூன்று குழந்தைகளையும் கட்டி முத்தமிட்டாள். ஒரே ஓட்டமாக வந்து காரில் ஏறினாள். இரு கண்ணும் தெரியாத தன்பிதாவிடம்கூட ஒரு பேச்சுபேசவில்லை. பெத்த தாய், தன் குழந்தையை விட்டுச்சென்றால் எப்படி அவள் வயிறும் இதயமும் பதைக்குமோ அப்படியே நித்யாவின் இதயம் பதைத்தது. தாயின் அன்பும், உணர்ச்சிகளும் எப்படியோ அவளுக்கு உண்டாகிய விநோதத்தை அவளாலேயே கண்டுபிடிக்க முடியவில்லை. இளம் வயதின் உணர்ச்சிகளோ, காதல் வாழ்க்கையின் வாசனையோ அவளுடைய இதயத்தில் ஒரு லவலேசமும் உண்டாகவில்லை. தர்மு, 'அம்மா! அம்மா!' என்று வீறிடும் சப்தம் கேட்டு நித்யாவின் துக்கம் பின்னும் உச்சத்தை எட்டியது. இவைகளைவிடப் பேரிரைச்சல் போட்டுக்கொண்டு கார் கிளம்பியது. ஹரிஹரன் நித்யாவின் பக்கலில் உட்கார்ந்து 'அப்பாடா!' என்று ஒரு பெருமூச்சு விட்டபடியே அவள்தோள்மீதுதன்கையைப்போட்டுக்கொண்டான்.

## 12

**சா**மி:—''என்னடா யாதவ்! உங்க வீட்டில் யார்யார் ஊருக்குப் போனார்கள்? நீ ஏன் போகவில்லை?

ராமு:—இரும்படிக்கிற இடத்தில் நாயிக்கு என்னடா வேலை? அவா அப்பாதான் சின்ன வயதில் காதல் கல்யாணம் செய்து கொண்டு ஹனிமூன் போயிருக்கிறார். தடிராமன்போல் இவன் எதற்குப் போகவேண்டும்? கிழவனாயிருந்தாலும் அதிர்ஷ்டத்தைப் பாரேன். இந்த கிழவனுக்காக ஒரு குருடன் ரதி தேவியைப் பெற்று வைத்துக்கொண்டு காத்திருந்தானே! அதுதானேடா ஆச்சரியம்!...

சாமி:—அழ அழக் குழந்தைகளைத் தள்ளிவிட்டுப்போனாராமே! நிஜமாகவாடா?...

யாத:—நிஜமென்ன பொய்யென்னடா! இந்த சனிகளுக்கு அழுகை என்ன! அப்பாவுக்குத்தான் வேலையும் உயர்ந்தது. வாலிபமும் திரும்பியது. இன்னும் 4, 5 வருடம் சென்றால் பென்ஷன் வாங்கிக்கொள்ளும் விதியமைந்துவிடும். அதற்குள்ளாக ஆடினால் உத்யோக தோரணையுடன் ஆட்டம் ஆடலாம். அதற்காக அட்டகாசத்துடன் போயிருக்கிறார். நான் வரவில்லை என்றுதான் எங்கப்பா அழுகிறாரா! ஊரான் வீட்டுப் பெண்ணே தேவலை. என்னை வருகிறாயா என்றாவது கேட்டாள்.

சாமி:—(ஏளனமாகச் சிரித்துக்கொண்டே) ஓகோ! பரவா யில்லை. உன்னை அழைக்கும்வரையில் துணிந்துவிட்டாளா!

யாத:—சீச்சீ! தாரதரம் தெரியாது பேசாதே. சாரங்கதரனில் வரும் சித்திராங்கி என்று நினைத்துவிட்டாயா! அப்படி அனுவசிய மாய், அக்கிரமமாய் பேசாதே! அந்தப் பெண் யாரோ ஊரான் வீட்டுப் பெண்தான். இருந்தாலும் என் தங்கை தம்பியிடத்தில் எத்தனை ப்ரீதியாகவிருக்கிறுள் தெரியுமா! எங்கப்பாசெய்த காரியம் எனக்கே பிடிக்கவில்லை. அவர் வயதென்ன! அவள் வயதென்ன! பார்ப்பதற்கு எத்தனை வித்தியாஸமாயிருக்கிறது பாரு. ஏதோ, தகப்பனுரின் அந்தகம் அவளை அப்படிச் செய்தது. இல்லாவிட்டால் அவளா இந்த கிழட்டுக்கு வாழ்க்கைப்படுவாள்.

ராமு:—ஏதடா! உன் வார்த்தைகள் தடபுடலாக இருக்கிறதே. அந்தப் பெண்ணிடத்தில் உனக்கு அத்தனை தயை பிறந்துவிட்டது. டேய் யாதவா!...அசட்டுப்பிசட்டென்று ஏதாவது பேசிவிட்டு உன்னுடைய பவிஷை...

யாத:—சீச்சீ! மடயா! என்னை என்னவென்று பார்த்தாய்? அத்தனை தூரம் புத்திகெட்டுவிடவில்லை.

சாமி:—சேச்சே! உன்னை புத்திகெட்டவன் என்று யாரடா சொன்னது? விமலாவின் மீது அப்படி...ஒரு கண் வலை வீசி இருக் கிருயே! அந்தமாதிரி இவள்மேலும் வீசிவிடாதே என்றுதான் சொல்லவந்தேன்.

யாத:—போடா! போக்கிறிப் பயல்களா! விமலாவும் இவளும் ஒன்ரு!

சாமி:—என்! விமலா கல்யாணமாகாத கன்னிகையோ! அவ ளும் கல்யாணமானவள்தானே! அவள் வீட்டை நீ சுற்றலாமா!

யாத:—அந்த விஷயம் வேறு. அதைப்பற்றி நீ கேட்கவேண் டாம். என்னிஷ்டம். அவள் என்னை வரும்படிக் கூப்பிடுகிறுள்: நானும் போகிறேன். இதைப்பற்றி நீ கேட்கவேண்டாம்...

சாமி:—ஆமாண்டா! நான் யாரு? வாஸ்தவந்தான். உன் தகப் பனுரின் கவுரவமென்ன! நீ திண்டாடும் திண்டாட்டமென்ன! இந்த மாதிரி தண்டாக் காரியம் செய்வதை ஊரே சிரிக்கிறது. எங்கேனும் நல்ல உதைதான் வாங்கப்போகிருய். உன்னுடைய சினேகிதனு யிற்றே என்று சொல்கிறேன். நீ அநியாயமாய்க் கெட்டுப்போனுல் எங்களுக்கு வருத்தமாயிருக்கிறது. அப்படி அந்தப் பெண்தான் முட்டாள்தனமாக நடந்துகொண்டாலும் உனக்கெங்கேடா புத்தி கெட்டுப்போயிற்று. 'சீ! நாயே! உன்னுடைய நடத்தையை உன் புருஷனிடம் சொல்லிவிடுவேன்' என்று நீ ஏன் நல்ல புத்தி புகட்டி யிருக்கக்கூடாது? உலகத்தில் அக்கிரமம் அதிகரிக்கிறது என்று கூக்குரலிடுகிறுர்கள். உன்னைப்போல் சோதாவும் அந்தப் பெண் ணைப்போல் பேமானியும் உலகத்திலிருக்கும்வரையில் ஏண்டா அதி

யாயம் மிஞ்சிப்போகாமலிருக்கும்...என்று பேசுவதைக் கேட்ட யாதவ் சோதாத்தனமாகப் பல்லைக்கடித்துக்கொண்டே ஏளன மாக நகைத்து, போடா, போ பிரகஸ்பதி! உன்னுடைய அதிகப் பிரஸங்கம் எனக்கு வேண்டாம். உன்னை நீ சரிப்படுத்திக்கொண்டு வாழுடா! போரும்" என்று கூறிவிட்டு சோதாப்பையனைப்போல் விசிலடித்தவாறு வீட்டிற்கு வந்தான்.

வரும்போதே குப்பம்மாள் முன்கட்டு ஹாலில் விசுப்பலகை யில் உட்கார்ந்து ஜபமாலையை உருட்டிக்கொண்டிருந்தாள். பேரப் பிள்ளையைப் பார்த்ததும் குப்பம்மாள் கோபத்துடன், "ஏண்டா யாதவ்! நேத்துராத்திரி ஏண்டா வீட்டிற்கே வரவில்லை? உங்கப்பாவு மில்லை; நீயும் வரவில்லை. கிழட்டுப்பிணம் நான் என்னடா செய் வேன்?" என்று அதட்டியவாறு கேட்டாள்.

யா:—என்ன செய்வாயா! ஒரு நோட்டை எடுத்து என் கையில் வைப்பாய். என் சினேகிதர்களிடம் நேற்று கடன் வாங்கி இருக்கிறேன். உம். எடு...எடு...பாட்டீ! எடு...இன்னிக்கிக்கூட வீட்டிற்கு வரமாட்டேன்.

குப்ப:—அட அக்கிரமமே? வீட்டிற்கு வராது எங்கேடா ஊர் சுற்றப்போகிறாய்?..உனக்கேண்டா இப்படிபுத்திகெட்டுப்போகிறது நீ இம்மாதிரி தான்தோனியாய் அலைவதால்தான் ஒருவரும் பெண் கொடுக்கவரமாட்டேனென்கிறார்.வயதென்னமட்டா ஆறதா!தினம் தினம்கடனுவது,கண்றாவியாவதுடா! பணத்திற்கு எங்கே போவது?

யாத:—எங்கே போவதா!...ஆமாம். எனக்குப் பணங்கொடுப் பதற்கு உன்னிடம் இல்லைதான். வீட்டில் குருட்டையும், செவிட் டையும் வைத்துக்கொண்டு தண்டபிண்டங் கொட்டுவதற்குப் பணமிருக்கும். இந்த வீடு சத்திரந்தானே!

குப்ப:—சீச்சீ! மடயா! அதிகப்பிரஸங்கித்தனமாகப் பேசாதே. 48 வயதான உங்கப்பாவுக்கு 45-க்கும் குறைந்த வயதென்று சொல்லிக் கல்யாணம் செய்ததற்கு யார் பெண்ணைக் கொடுப் பார்கள்? ஐயோ, பாவம்! அந்த பெண்தான்...

யா:—போரும்; போரும். நிறுத்து, நீயே வேண்டுமென்று செய்த காரியத்திற்கு பெருமை வேறு பேசுகிறாயா! இந்த பீடை களை வீட்டைவிட்டு ஏன் துரத்தக்கூடாது?...எது எப்படியாவது போகட்டும். எனக்குப் பணத்தை முதலில் வைத்துவிட்டுப் பேசு— என்று முரட்டுத்தனமாகப் பேசும் வார்த்தைகள் பக்கத்தறையில் உட்கார்ந்திருக்கும் மூர்த்தியின் காதில் விழுந்ததும் நெருப்பை மிதித்தவன்போல் துள்ளினான்.

அப்படியே ஞானம்பாள், தாமு இருவரும் கேட்டுத் துடித் தார்கள். குப்பம்மாளின் வாயில்கூட இத்தனை தயை நிறைந்த வார்த்தைகள் பிறந்ததைக் கேட்டு வியப்பும் அடைந்தார்கள். ஹரி ஹரனுக்கு 48 வயதாகிய ரகஸ்யத்தை அறிந்து மனங்கொதித்தது.

இனி என்ன செய்துதான் என்ன உபயோகம்? மூர்த்தியின் கண்களிலிருந்து நீர் வழிவதைக் கண்ட ஞானம், "ஏன் இந்த விசனம்? நம் தலைவிதி இப்படியமைந்திருக்கிறது. யார் எதைச்சொன்னாலும் கேட்கவேண்டியதுதானே!" என்று விசனத்துடன் கூறினாள்.

மூர்த்:—விதி! விதி என்பதை அறிந்திருப்பினும் சுருக்கென்று முள் குத்துவதுபோல் கூறும் வார்த்தைகளைமட்டும் கேட்டுச் சகிக்கமுடியவில்லை. மனது தத்தளிக்கின்றது. எந்த வேளை பார்த்தாலும் இந்த பிள்ளை இப்படியே சொல்கிறான். என் காலமும் முடியமாட்டேனென்கிறது.

தாமோ:—அப்பா! என்னைக்கூட அவன் பார்க்கிற இடத்திலெல்லாம் கண்டவர்கள் முன்பும், "தரித்திரம்...குருடனின் மகன் திருடன், முரடன், பன்னாடை, எங்கள் வீட்டுச் சோற்றிற்கு நாய்போல் வந்துவிட்டது" என்று கூசாமல் சொல்கிறான். நான் அக்காவிடமும் சொன்னேன். அக்கா என்னையே அடக்கி "பொறுமையாக இரு. ஒரு குறையும் இல்லை. பொறுமையாகவிருந்தால் பெருமை அடையலாம்" என்று கூறிவிடுகிறாள். எனக்கும் மிகவும் வருத்தமாகவிருக்கிறது! என்னசெய்வது?" என்றுகண்ணீர்விட்டான்

இளந்தளிர்போன்ற இதயத்தில் இத்தனை விசனம் தெரியும்போது அதற்கு என்ன பதில் சொல்லமுடியும்? மூவருடைய விழிகளும் மழையைப் பொழிந்தன. 'பட்டினி கிடந்து செத்தாலும் சாகலாம். இப்படி வார்த்தையைக் கேட்பார்களா!' என்று மூவருடைய இதயங்களும் நினைத்தன.

## 13

உல்லாஸ வாழ்க்கை நடத்துவதற்காக தம்பதிகள் காரிலேயே பிரயாணத்தை முடித்துக்கொண்டு, ஏற்பாடு செய்திருந்த ஒரு தனி மாடி வீட்டில் இறங்கினார்கள். ஏதோ பெரிய சொத்தைப் பறிகொடுத்தவளைப்போல் நித்யா காணப்பட்டாளேயன்றி ஒரு துளி சந்தோஷமோ, தெம்போ அவள் மனத்தில் உண்டாகவில்லை.

பொம்மைக்கு எந்திரப்ரயோகம் செய்ததுபோல் நித்யா நடப்பதும் பேசுவதும் விநோதமாயமைந்தது. நல்ல கட்டைத்தடியன் ஒருவன் சமையல்காரனாக அங்கு வந்திருப்பதைப் பார்க்கவே நித்யாவுக்குப் பிடிக்கவில்லை. "எனக்கென்னதான் வேலை இருக்கிறது? சமையல் வேலையாவது செய்து பொழுதைப் போக்கலாம்; இவன் வேண்டாம் அனுப்பிவிடுங்கள்" என்றாள்.

ஹரி—சேச்சே! நம் அந்தஸ்திற்கு சமையல்காரனில்லாதிருப்பதா! இதில்தானா சிக்கனம்பிடிக்கவேண்டும்? நீ நிம்மதியாக ஊரைச்

சுற்றிப் பார்ப்பதைவிட்டு சமையல் செய்வதாவது. எனக்குப் பிடிக்கவில்லை.

நித்:—தன் வீட்டு வேலையைத் தான் செய்வதா ஒரு இளப்பம்? நான் என்ன சம்பத்திலேயேபிறந்து சம்பத்துலேயேவளர்ந்தவளா! தரித்திரத்தில் திளேந்தவள் தானே! எனக்குக் காரியம் செய்வதில் ஒரு ச்ரமமுமில்லே. மெத்த சந்தோஷந்தான். அந்த மனிதனேப் பார்த்தாலே எனக்குப் பிடிக்கவில்லே. அவனே அனுப்பிவிடுங்கள். அப்படி வேண்டுமாயின் ஒரு பெண்பிள்ளேயை ஏற்பாடு செய்யுங்கள்.

ஹரி:—போதும்! போதும்! உனக்கு உலக விவகாரந் தெரிந்தால்தானே! பெண்பிள்ளேகளே சமையலுக்கு அமர்த்தினல் செட்டும் சீருமாய் செய்வார்கள் என்று சிலர் நினேக்கிருர்கள். அவர்கள் அம்மாதிரி சிக்கனமாகச் செய்வதுபோல் செய்து எஜமானியைத் திருப்தி செய்தவாறு சமயம் பார்த்துத் திருடிக்கொண்டு போவதில் ராணிதான். அதிலும் பெரிய பணக்காரர்கள் வீட்டில் நாலுபக்கமும் வழி இருப்பதால் போவது தெரியாமல் போகிற கொள்ளேயை என் சிநேகிதர்களின் வீட்டில் பார்த்தேன். அதனல் எனக்குப் பிடிப்பதில்லே. அதோடு பிள்ளேகுட்டிக்காரியாயிருந்தால், பாவாடை குடு, சொக்காய் கொடு, துணிகொடு' என்று பிடுங்கித் தின்பார்கள். எஜமானியம்மாளின் புடவையிலேயே கண்ணேட்டம். 'அதை வாங்குவதற்காகத் தான் தினம் கந்தல் புடவைகளேக் கட்டிக் கொண்டுவந்து எஜமானியம்மாளேத் துளேத்துத்துளேத்து தந்திரமாக வாங்கிக் கட்டிக்கொண்டபிறகுதான் அவர்கள் கட்டை நிம்மதியாகும். இந்த ரகஸியங்களெல்லாம் உனக்கென்னதெரியும்? நீ எந்த பெரிய மனுஷன் வீட்டில் பார்த்திருக்கிருய்?

நித்:—ஆமாம். நான்தான் தரித்திர லக்ஷ்மியுடன் விளேயாடினவளாயிற்றே, நான் எதைக் கண்டேன். நீங்கள் புருஷராயிருந்தும் சமையல்காரிகளேப்பற்றி நன்ருக ஆராய்ச்சி செய்திருக்கிறீர்கள். சமையல்காரர்களில் சிலரைப்பற்றி நான்கூட கேள்விப்பட்டிருக்கிறேன். ஒரு குடும்பத்திற்கு வேண்டிய சாமான்களின் அளவைப் போல் மூன்று பங்கு சாமான்கள் கொட்டி அழித்து தாம்தூம் என்று செய்கிருர்கள். தன் மனேவியை எஜமானியிடம் அனுப்பி புடவை, ரவிக்கை கேட்கும்படிச் செய்கிருர்கள். சிலர் வீட்டிலுள்ள பெண்பிள்ளேகளே விகாரமாகப் பார்க்கிருர்கள். தன் பிள்ளேயை ஏதோ சாக்கு வைத்து வரச்சொல்லி தவருது காப்பியும் டிப்பனும் கொடுத்து உபசரிப்பதோடு ரகஸியமாக வேஷ்டியில் சாமான்களேயும் முடிந்து அனுப்பிவிடுகிருர்கள்.

வேண்டுமென்று சாவு தீட்டு, பிரஸவித்த புருடு தீட்டு...உடம்பு சரியில்லே...ஊரில் உடம்பு சரியில்லேயென்று தந்தி வந்திருக்கிறது... தாயாருக்கு உடம்பு அதிகம்...தன் குழந்தையே இறந்துவிட்டது... என்றெல்லாம் கூசாமல் பொய் சொல்லிக்கொண்டு முக்கியமான

சமயங்களில் மட்டம்போடுகிறுர்கள். நன்ருக மனப்பூர்த்தியாய் எஜமானிடத்தில் விச்வாஸத்துடன் வேலே செய்யும் உண்மையன்புடனிருப்பவர்களும் இருக்கிறுர்கள். உலகம் பலவிதம். நாம் அவர்களே நம்பினல் அவர்களும் நம்மை நம்பி நன்ருகச் செய்வார்கள். சத்தியமாக நடப்பார்கள். இதுதான் இருக்கும் ரகஸியம். நல்ல யோக்யமான சமையல்காரர்கள் நீடித்து நிலேப்பதோடு நல்ல பெயரும் வாங்கி விருத்திக்கு வருகிறுர்கள். திருடுவதோ, மோசம்செய்வதோ, இரு வகுப்பாரிடமும் இருக்கிறது. நல்லவர்களும் இருவகுப்பிலும் இருக்கிறுர்கள். எஜமாஞக்களேப் பொருத்திருக்கிறது வேலேக்காரர்களின் நன்மையும் தீமையும்...

ஹரி:—சரி சரி...இந்த சமையல்கார ராமாயணம் இப்போது எதற்கு? இவனுக்குப் பேசி அட்வான்ஸ் கொடுத்தாயிற்று. ஆகையால் இவன்தான் இருக்கவேண்டும். வீண் விதண்டாவாதம் செய்யாதே" என்று ஒரு அதட்டுப் போட்டார்.

இதற்குள் புதிய சமையல்காரன் காப்பியும், ரவா தோசையும் கொண்டுவந்து வைத்தான். ஹரிஹரன் வெகு சந்தேகப் பேர்வழி என்பது தெரிந்ததனுல்தான் நித்யாவுக்கு இத்தனே பயம் உண்டாகியது. அதற்கேற்ருப்போல் அந்தக் கட்டைதடியன் நித்யாவுக்குப் பலகாரத்தை வைத்துவிட்டு அசட்டுப்பிசட்டென்று விழித்தவாறு, 'நெய் வேணுமா! சக்கரை வேண்டுமா!...சட்ணி போதுமா... தோசை நன்ருயிருக்கிறதா! உங்கள் ஊரிலுள்ள பரிசாரகன் செய்வதுபோல் பிடிக்கிறதா!' என்றெல்லாம் கேள்வி கேட்டாள்.

நித்யாவுக்கு இது கட்டோடு பிடிக்கவில்லே. 'சுதாவாவது கூட இருந்தால் பேச்சுத்துணேக்குச்சரியாயிருக்குமே, அவளும்இல்லேயே!' என்று வருந்தினுள். "குழந்தை தர்மு என்ன அழுகிறதோ! சுதா எப்படி இளேத்துவிட்டாளோ? அப்பா எப்படியிருக்கிறுரோ!" என்கிற எண்ணங்கள் அவள் இதயத்தை வாட்டியதாலும், ஒரே நெட்டாக காரில் பிரயாணம் செய்ததாலும், அவளுக்கு உடம்பே சரியாக இல்லே. அன்று பூராவும் மண்டை இடியும், வாந்தியும், தலே சுற்றலும் பொறுக்கமுடியாதிருந்ததால் எழுந்திருக்கவே இல்லே.

ஹரிஹரனுக்கோ, அவளேத் தனியே விட்டுப் போவதற்குத் துணியவில்லேயாதலால் தலேயெழுத்தே என்று உட்கார்ந்திருந்தான். பூஞ்சேரி என்கிற ஊரில் அழகிய தோட்டங்களும், ஆறுகளும் வெகு இன்பகரமான காக்ஷியாகவிருப்பதால் நித்யாவுடன் ஷோக்காகப் போகவேண்டுமென்று கிழவருக்கு ஆசை. நித்யாவினுல் வரமுடியாததால் அவருக்கு மிக்கவேதனேயாகிவிட்டது.

அன்று மறுதினம் கிழவரின் உபத்திரவத்தைத் தாங்காமல் நித்யா கிளம்பி தோட்டத்திற்குச் சென்ருள். தோட்டத்தின் அழகைக்காண நித்யாவின் மனது பாகாயுருகியது. குழந்தைகளே இத்தகைய காக்ஷிகள் காணவிடாது விட்டுவிட்டு வந்துவிட்டாரே

என்று ஒருபுறமும், இத்தகைய அருமையான இயற்கையும் செயற்கையும் கலந்த அழகிய காக்ஷிகளைத் தன் பிதா கண்டுகளிக்கக் கொடுத்து வைக்கவில்லையே!' என்றும் இதயம் துடித்தது.

தான் என்னதான் செல்வாக்குடன் இருப்பினும் மனத்திற்குச் சமாதானமாகவில்லை. தோட்டத்தில் நவநாகரீக தம்பதிகள் அன்பின் மிகுதியால் ஆனந்தக் கூத்தாடி மகிழ்வதையும், குழந்தை குட்டிகள் விளையாடுவதையும் பார்க்க நித்யாவுக்குத் தம் குழந்தைகள் மீது நினைவு உண்டாகியது. அங்கு வந்துள்ள குழந்தைகளுடன் தானே வலுவில் விளையாடப்போனாள்.

அருகிலிருந்த ஒரு பெரியம்மா குழந்தைகளின்மூலமாகவே பேச்சுக்கொடுத்து நித்யாவிடம்பேசவாரம்பித்தாள். "அவர் உங்கள் தகப்பனாரா! தாயார் வரவில்லையா!...உனக்குக் குழந்தைகளைக் கண்டால் இத்தனை ஆசை இருக்கிறதே....நிறைய பிறக்கவேண்டும்" என்று வாழ்த்தவும் தொடங்கிவிட்டாள்.

இந்த கேள்விக்கு நித்யா என்ன பதில் சொல்வாள் பாவம். தகப்பனார் என்று கூறும்போதுமட்டும் இதயத்தில் சுருக்கென்று தைத்தது. சிறிது நேரம் பதில் கூறாது மௌனமாகவிருந்தாள். ஏதோ சங்கடம் செய்து வதைத்தது. பதிலே பேசாமல் போய் விடலாம் என்று கூட எண்ணினாள்.

ஆனால் "நானாக மனமுவந்து செய்துகொண்ட காரியத்திற்கு வெட்கமோ, துக்கமோ என்ன இருக்கிறது. இவர் என் கணவன் என்று என் சொல்லக்கூடாது?" என்று ஒரு வைராக்யமான தைரியம் பிறந்ததால், ஒருமாதிரியாக நகைத்துக்கொண்டே..."இவர் என் தகப்பனாரல்ல; என் கணவர். எனக்குத் தாய் தந்தையர்கள் ஊரில் இருக்கிறார்கள். என் கணவருக்கும் ஏராளமாகக் குழந்தைகள் இருப்பதால் அவருடைய குழந்தைகள் என் குழந்தைகள்தானே! அதனால் எனக்குக்குழந்தை இல்லையே என்கிற கவலையே இல்லை"...

என்று சொல்வதைக் கேட்ட கிழவி அப்படியே தடைகட்டிய நாகம்போல் தம்பித்துவிட்டாள். "என்ன!...உன் கணவனா!...இந்த கிழவரா! ஐயோ! அவர் உன்னுடைய தாதா என்றுகூடச் சொல்லலாம்போலிருக்கிறதே. இவருக்கு ஏண்டியம்மா உன்னைத் தள்ளினார்கள்?" என்று கிழவி அனுதாபங்காட்டவாரம்பித்தாள்.

நித்யாவுக்குப் பேசவே பிடிக்கவில்லையென்றாலும் நகைத்துக்கொண்டே, "ஏம் பாட்டீ! ஏன் இத்தனை ஆச்சரியமும் அனுதாபமும் காட்டிப் பேசுகிறீர்கள்!...கிழவரானால் என்ன குறைந்துவிட்டது? சாக்ஷாத் வள்ளிநாயகி சுப்பிரமண்யக் கிழவரை மணக்கவில்லையா? எல்லாவற்றிற்குநாம் புராணங்களையும் பாரதபாகவத, இதிகாஸங்களையும்உபமானம்பேசுகிறோமே,அதுபோல்இதற்கு உபமானமில்லையா! நளாயினி என்கிற உத்தமி, வயதாகிய மவுத்கல்ய ரிஷியை மணக்கவில்லையா! அகல்யை கௌதமரையும், அனுசூயை அத்ரி

மகரிஷியையும் மணக்கவில்லையா! அக்காலத்தில் ரிஷிகளெல்லாம் இளம் வாலிபர்களா! அவர்களின் பதிவ்ரதத்தையும், உத்தம சரிதையின் ஸாரத்தையும் கைப்பற்றவேண்டுமென்று நம் மதம் கூறுகையில் வயதானவர்களை மட்டும் மணக்க அதே மதம் இடந்தரவில்லையா!...என்று ஒரு போடு போட்டதைக் கேட்ட கிழவியின் தேகமே ஆச்சரியத்தினால் மயிர்ச்சிலிர்த்தது.

"அம்மா! நீ சாமான்யப் பெண்ணல்ல. தேவதையோ, வனதேவதையோதான். இந்த உலகத்தில் நான் எனக்கான வயதில் எத்தனையோ அதிசயங்களைக் கண்ணாலும் கண்டிருக்கிறேன்; காதாலும் கேட்டிருக்கிறேன். புத்தகங்களிலும் படித்திருக்கிறேன். கிழவனை மனமுவந்து மணந்துகொண்டு அதற்கு ஆதாரமும் எடுத்துக் காட்டும் புண்ணியவதி உன்னைத் தவிர நான் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. உம்...இதுதான் விதி என்பது இருந்தாலும் உன் மனம் எப்படி இதற்குத் துணிந்தது? தரித்திரத்தின் கொடுமைதானிருக்கவேண்டும்"...என்றாள்.

நித்:—பாட்டி! நீங்கள் இத்தனை அன்புடன்என்னிடம்பேசுவது எனக்குப் பரம சந்தோஷமாகவிருக்கிறது. வறுமை ஒன்றுமட்டும் இருந்தாலும் மக்கள் வீடுவீடாய் சட்டிபிச்சை வாங்கிப்பிழைக்கலாம். என் தகப்பனாரோ, இரு கண்களும் தெரியாத அந்தகர்...

கிழவி:—ஹா!...அந்தகரா!...ஐயோ!...பிறவிக்குருடா!

நித்.—உம்...பிறவிக்குருடாயின் அவருக்கு இந்த தொல்லைகள் உண்டாகியிருக்காதே....மத்தியில்தான் விதியின் கொடுமையால் கண் மறைந்தது. என் தாயார், தகப்பனார், அருமையான ஒரு தம்பி ஆக மூன்று பேரையும் சம்ரக்ஷிப்பதற்காகவே பகவான் எனக்கு இந்த மனிதரைக் காட்டினார். நான் மனப்பூர்வமாகத் தெரிந்துதான் இவரை மணந்தேன். நான் மூன்றாந்தாரம். முன்னிருவருக்கும் சேர்ந்து நான்கு குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்கள்தான் என் செல்வங்கள்....

கிழவியினால் ஆச்சரியத்தைத் தாங்கவே முடியவில்லை. நித்யாவைச் சேர்த்துக்கட்டியவாறு தடவிக்கொடுத்தாள். "அம்மா! வயதில் நீ மகா சிறியவளாகவிருப்பினும் உன்னுடைய பெற்றோரிடத்தில் நீ காட்டியுள்ள தயையும், அதற்காக நீ உன் இன்பவாழ்க்கையையே த்யாகம் செய்த பெருமையும் என்னை ப்ரமிக்கச் செய்கின்றன. நீதான் அந்த உத்தமி என்பது எனக்குத் தெரிந்ததும் பின்னும் பரிதாபமாயிருக்கிறது. என்னுடைய தம்பியின் மகன் கோபு உன் சரிதை முற்றும் கூறி உன்னை தயாநிதி என்று வாய்க்கு வாய் கொண்டாடுகிறான். அவன்கூட உன்னை மணக்கவந்தானாம். நீ நிராகரித்துவிட்டாயாம். அதே ஏக்கத்தில் அவன் உருமாறிவிட்டான். நாங்கள் எத்தனை சொல்லியும் கேட்கமாட்டேன் என்கிறான்... அடாடா! நீதானா அந்தப் பெண்?"

என்று கிழவி சுற்றிவளைத்துக்கொண்டு வெகு சமீபத்தில் வந்துவிடவே நித்யாவுக்கு அதற்குமேல் அங்கு பேச மனம் சகிக்கவில்லை. இங்கிருந்தால் இன்னும் வார்த்தைகள் பிறக்கும் என்கிற பயம் எடுத்துக்கொண்டதால் "நல்லவர்களுக்கு அடையாளம்சொல்லாமல் போனுளாம்" என்கிற பழமொழிப்படி பேசாமல் போய்விட்டாள்.

கிழவர் ஒரு ஆஸனத்தில் உட்கார்ந்திருந்தார். அவரைப்போல வயதான ஒருவர் அங்கு வந்தார். கிழவரைப் பார்த்து, "என் சார்! வரும்போது உங்கள் டாட்டர் கூட வந்தாப்போலிருக்கே...இப்போது நீங்கள்மட்டும் இருக்கிறீர்கள்...நானும் ஒரு ரிட்டயர்டு மேன்தான். நம்ப பையனுக்கு கல்யாணமாகவேண்டும். உங்கள் பெண்ணை தூரவிருந்து எங்க வீட்டுப் பெண்கள் பார்த்தார்களாம். 'கல்யாணப்பேச்சாகையால் வலுவில்பேசலாம்;போய்க்கேளுங்கள்' என்று பெண்டுகள் தொந்தரவு செய்தார்கள். அதனுல் வந்தேன்' என்று தாமே கடகடவென்று ஒப்பித்தார்.

இதைக்கேட்ட ஹரிஹரனுக்கு மூச்சே நின்றுவிட்டதுபோல் தோன்றியது. பின்பக்கம் மரத்தின் மறைவாக நின்று இதைக் கேட்டுக்கொண்டிருந்த நித்யாவின் கண்களில் அவளை யறியாமல் மளமளவென்று ஜலம் வந்துவிட்டது. ஆனுல் வாயிலிருந்து அவளால் அடக்கமுடியாதவாறு பெரிய சத்தத்துடன் ஒரு நகைப்பும் எழும்பி, அந்த த்வனி ஹரிஹரனின் காதில் விழுந்தது.

ஹரிஹரனின் இதயத்தில் செய்யும் வேதனையால் முகத்தில் அசடு தட்டி விகாரப்பட்டுவிட்டது. கேட்டவருக்கு எவ்விதமான பதிலும் பேசாமல் உத்தரியத்தை இழுத்துப் போர்த்திக்கொண்டு தடதடவென்று நடந்தார். பொம்மைபோல் பின்னுலேயே நித்யாவும் நடந்தாள். இருவருக்கும் இடையே பெரிய மௌனம் குடிகொண்டது. வெகு நேரம் தோட்டத்திலிருக்கவேண்டும் என்று எண்ணிச் சென்ற ஹரிஹரன் தன்னையறியாமலேயே வீட்டிற்குவந்துவிட்டார்.

அன்று இரவு படுத்த நித்யா மறுதினம் காலையில் வழக்கம் போல் எழுந்திருக்கவே இல்லை. வெகு நேரமாகியதால் ஹரிஹரன் "நித்யா! மணி 8 கூட அடித்துவிட்டதே! இன்னுமா தூங்குகிறுய்? எழுந்திரு" என்று தானே அவளை அசைத்து எழுப்பினுர். அப்போது நித்யாவின்உடம்பு நெருப்பைப்போல் சுடுவதைக்கண்டு "ஐயையோ! ஜுரமல்லவா காய்கிறது!" என்று அலறினுர்.

உடனே டாக்டரை வரவழைத்துப் பார்த்தார். "105-க்குமேல் ஜுரமடிப்பதால் நினைவே இல்லாது கிடக்கிறுள். உடனே ஐஸ் வைத்தால்தான் ஜுரத்தின் வேகத்தால் மூளை கலங்காமலிருக்கும். இல்லையேல் கஷ்டம்" என்று டாக்டர் கடுமையாக கூறிவிட்டார். அடுத்த நிமிடமே ஒரு நர்ஸ் ஏற்பாடுசெய்து ஐஸ் வைக்கவும் வேளாவேளைக்கு மருந்து கொடுக்கவும் செய்தார்.

ஆனால் நித்யா என்னவோ கண்ணையே திறக்கவில்லை. "தர்மூ! அழாதேம்மா...என் கண்ணல்ல...சுதா!...தர்மூவுக்குப் பழம் வாங்கிக்கொடு"...என்று வாய்ப்பிதற்றுகிறாளேயன்றி நினைவு மட்டும் இல்லை. ஒருநாள், இரண்டு நாள் என்று 5 நாட்களாகிவிட்டன. அப்போதும் குறைவென்பதே இல்லை.

"ஒருவேளை இது டைபாயிடு ஜுரமாகவிருக்கும்போல் தோன்றுகிறது. மிகவும் விபரீதமாக வந்திருக்கிறது. வெகு ஜாக்கிரதையாகப் பார்க்காவிட்டால் அபாயகரத்தில் முடிந்தாலும் முடியும்" என்று டாக்டர் கூறியதைக் கேட்டதும் பெண்டு பாக்யமற்ற ஹரிஹரானின் தலையில் இடி இடித்ததுபோலாயிற்று.

அடிக்கடி வாய்ப் பிதற்றுவதைக் கேட்கும் டாக்டர் "அந்த குழந்தைகளை இங்கு வரவழைத்துவிடும். சரியாகிப்போனாலும் போகலாம்" என்று யோசனை கூறினார். பாவம்! கிழமாகியபின்னரும் நவீன முறையில் உல்லாஸமாகக் காலங்கழிக்க எண்ணி, தான் பெத்த குழந்தைகளையும் நிர்த்தாக்ஷிண்யமாகத் தள்ளிவிட்டு வந்த மனிதருக்கு சோதனைபோலும் தண்டனைபோலும் ஏற்பட்ட இந்த அதிர்ச்சி அவரை மிகவும் வாட்டி வருத்துகிறது.

'ஒருவேளை நித்யாவும் இறந்துவிட்டால்?' என்று நினைக்கும்போது ஹரிஹரனால் தாங்கவேமுடியாத சங்கடம் செய்தது. அந்தகனாகிய தகப்பனாருக்கு என்ன பதில் சொல்வது என்று ஏதேதோ யோசனைகள் உண்டாகிவிட்டன. இந்த வேதனை சகிக்கமுடியாது தலை சுழலுகிறது. முதல் வகுப்பு வண்டியில் வைத்து டாக்டரின் உதவியுடன் ஊருக்கே அழைத்துப்போய்விடலாமா என்றும் எண்ணினான்: அப்படியே செய்யவும் துணிந்துவிட்டான்.

அதே சமயம் இவனுக்கோர் கடிதம் வந்தது. ஸ்ரீமதி குப்பம்மாள் எழுதியதையறிந்து படிக்கத் தொடங்கினான்.

"சிரஞ்சிவி ஹரிஹரனுக்கு ஆசீர்வாதம். உபயகுசலோபரி.

உனக்கு எழுதவேண்டாமென்று இத்தனை நாளாயும் ஓட்டினேன். இனிமேல் முடியவில்லை. நீ ஊருக்குப் போன மறுநாளே தர்மூவுக்கு 'அம்மா! அம்மா!' என்று அழுதவேகத்தில் ஜுரம் வந்துவிட்டது. இத்தனை நாள் வைத்தியம் செய்தும் குணமாகவில்லை. 'டைபாயிடுஜுரம் இது; வெகு ஜாக்ரதையாகப் பார்க்காவிட்டால் குழந்தை இறந்துவிடும்' என்று டாக்டர் கூறிவிட்டார். எனக்கோ ஒன்றுமே தோன்றவில்லை. குழந்தை கண்ணையே திறக்கவில்லை. 'அம்மா! அம்மா!' என்று அலறுகிறது. எனக்குப் பயமாகவிருக்கிறது. நீ ஒரு தரம் வந்து பார்த்துவிட்டுப் போ! ஸுதாவுக்கும் ஜுரம். ஆனால் இவ்வளவு கடுமை இல்லை. கண்ணை விழித்துப் பார்க்கிறாள்; பேசுகிறாள். தர்மூவுக்குத்தான் நினைவே இல்லை. யாதவ் வீட்டில்

தங்குவதுமில்லை. வந்தாலும் கவனிப்பதே இல்லை. தாமோதரன்தான் டாக்டரை வீட்டிற்கு அழைத்து வந்து குழந்தைகளுக்கு மருந்து வாங்கித் தருகிறான். அவனே ஐஸ்கூட வைக்கிறான். இரவு தூக்கம் விழித்து ஞானம்பாள்தான் தர்முவை மடியிலேயே வைத்துக்கொண்டிருக்கிறாள். எனக்கு மிகவும் பயமாயிருப்பதால் உடனே வரவும்.

குப்பம்மாள்''

என்றிருந்ததைப் படித்ததும் ஹரிஹரனுக்கு 'உல்லாஸயாத்திரை வந்த வைபோகம் போதும் போதும்' என்று தோன்றி சங்கடத்தின் மேல் சங்கடம் செய்துவிட்டது. என்னதான் புதுமோகலாகிரியில் மனந்துணிந்து வந்துவிட்டபோதிலும் குழந்தை சாகப் பிழைக்கக் கிடக்கிறது என்றதைக்காண பெத்த இதயம் சும்மாயிருக்க முடியுமா! எத்தகைய சத்ருக்களுக்கும் மரணம் என்றால் அது வருவதற்கு மனம் சம்மதிக்குமா! சத்ருக்களாகவிருப்பினும் நன்றாக இருக்கவேண்டும் என்றல்லவா நெஞ்சு நினைக்கவேண்டும்.

சுருக்கென்று காலில் தைக்கும் முள்ளாகவிருப்பினும் தைக்கும்போது சுரீரென்றுபாதையுண்டாகியபோது அதன்மீது கோபம் வருகிறது. அதே முள் வேலியாக உதவும்போது அதன் அருமை தெரிகிறது. அதேபோலத்தான் உலக வியல்பும். இன்றுள்ள நான்கு குழந்தைகளில் ஒன்று குறைந்துவிடுமாயின் எவ்வளவு கஷ்டம் உண்டாகும்? ஒன்றோடொன்று சேர்ந்தால் கஞ்சியோ கூழோ வார்த்துக் காப்பாற்றலாம்' என்றுதானே ஏழைகளின் இதயமும் நினைக்கும். 'ஒன்று போய்விட்டதே. அதன் கஞ்சி மிச்சமாகியது. இன்னும் மற்றவைகளுக்கு வார்க்கலாம்' என்ற த்ருப்தி எந்த பெற்றோரின் இதயத்திலும் தோன்றாதல்லவா! ஹரிஹரன் பாடு த்ருசங்கு ச்வர்க்கமாகிவிட்டது. என்னசெய்வதென்று தோன்றாது தத்தளித்தார்.

## 14

உலகத்தில், தாய் இறந்தபிறகு அவளுடைய குழந்தைகளுக்கு சகலமான சலுகைகளும் அவளோடு போய்விட்டதென்பது கண்முன் காணும் பிரத்யக்ஷமான காக்ஷியாகும். அதை நிரூபிக்கும் பொருட்டே ''தாயோடு போயிற்று செல்லம்; தேரோடு போயிற்று திருநாள்'' என்கிற பழமொழியும் வெகுகாலமாக வழங்கி வருகிறது.

தாய் மறைந்த பிறகு அவள் குழந்தைகளின் அருமை தெரிந்து மறு விவாகம் செய்துகொள்ளாமலிருந்தால், குழந்தையின் செல்

வாக்குக் குறைவதில்லை. மறுமணம்செய்துகொண்டாலோ நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது வீடுகளில் "முழங்கையில் பட்ட சுகமும், மூத்தாள் பசங்களின் வாழ்க்கையும்'' என்கிற பழமொழிப் படிக்குத்தான் உள்ளங்கை நெல்லிக்கனிபோலிருக்கிறது.

இளையாளைக் காணும்போதே பெத்த தந்தையின் இதயங்கூட அன்பு வரண்டு சூன்யமாகி இளையாள் மோகத்தில் மூழ்கி மக்களைச் சிதறவடிக்கத் துணிந்துவிடுகிறான். அப்படி அவன் செய்ய மறுத்தாலோ இளையாளே அதிகாரச் சக்கரத்தை பிரயோகப்படுத்திவிடுகிறாள். கண்ணை மூடிக்கொண்டு கண்ட இடத்திலும் மூத்தாளின் பெண்ணைக்கொடுத்து விவாகத்தைச் செய்யவும் துணிகிறார்கள்.

அந்த பெண் ஒருதினம் தகப்பனார் வீட்டிற்கு வருவதற்கு எங்கினாலும் அன்போடு அழைக்க யார் இருக்கிறார்கள்? அப்படியும் மானங்கெட்டு வந்தால் வரும் இடத்தில் இளையாளிடம் மூஞ்சியடி, சொட்டுச் சொல்லு. கணவன் வீட்டிலும் 'வக்கற்றது. திக்கற்றது, விதியற்றது' என்கிற சஹஸ்ரநாம அர்ச்சனை, இம்மாதிரி எத்தனையோ விதி லீலைகளை உலகத்தில் பார்த்துப் பார்த்து மக்களின் மனத்தில் நன்றாகத் தோய்ந்துபோயிருக்கையில் ஒரு இளையாள், அதிலும் ரதியைப் பழிக்கும் அழகுடைய வனிதை, சிறு பெண் மூத்தவளின் பசங்களிடத்தில் பிராணனாகவிருப்பதைப் பார்த்தால் உலகம் வியக்காமலிருக்கமுடியுமா!

மூத்தவளின் மகள் இளையவளை ஒரு துரும்புபோல் எண்ணி ஆட்டிவைப்பதையும், ஓர்ப்படிகள் சண்டையின்றி ஏக குடும்பமாகக் குடும்பம் நடத்துவதையும், மச்சினர் குழந்தையைத் தன் குழந்தையைப்போல் எண்ணிச் செய்வதையும், விரோதிக்கும் உபகாரம் செய்வதையும் பார்த்தால் உலகம் வியக்காமலிருக்குமா?

மேற்குறித்த கோஷ்டியில் முதல்தாம்பூலத்தை நித்யா வெகு விரைவில் பெற்றுவிட்டாள். ஒரு ஆச்சரியமான சமாச்சாரம் கிடைத்துவிட்டால் அது தூஷணையாயினும் சரி, பூஷணையாயினும் சரி ஜனங்கள் அதைப்பற்றித் தம் மனம் போனபடிப் பேசுவதை விடமாட்டார்களல்லவா! நித்யாவின் அழகைக்கொண்டாடிப் பேசுவதைவிட அவளுடைய குணத்தழகைப்பற்றி அபாரமாகப் பேசத் தொடங்கினார்கள்.

"அத்தகைய ஆசையுடையவர்களைப் பிரித்ததனால்தான் இப்படி ஆபத்தான உடம்பு வந்துவிட்டது. ஹரிஹரனின் துரதிருஷ்டம் அந்த பெண்ணை விழுங்கியே இருக்கும். அந்த தாயற்றக் குழந்தைகளின் அதிர்ஷ்டமும், இருகண்ணுந் தெரியாதிருக்கும் தகப்பனாரின் அதிர்ஷ்டமுந்தான் அவள் பிழைத்தாள். அத்தனை ஜுரத்திலும் குழந்தையைவிடாது தன் பக்கத்திலேயே கட்டிக்கொண்டிருந்த காக்ஷி வெகு ஆச்சரியமாயிருந்தது. சிற்றன்னையைப் பார்த்த உடனே

அந்த குழந்தைக்கு நன்ருகக் குணமாகிவிட்டதே. இதன்றோ அன் பின் மகிமை" என்று அந்தவூரில் ஒரேமுகமாகப்பேசிக்கொண்டனர்.

சற்று வயதில் பெரியவரான கிழவர் ஒருவர் ஹரிஹரனை நேரில் கண்டு, "ஹரிஹரா! இனிமேல் இப்படிப்பட்ட பைத்தியக் காரக் காரியம் செய்யாதே. குழந்தைகளின் அதிர்ஷ்டத்தினுல்தான் உன் மனைவி பிழைத்தாள். உன் துரதிர்ஷ்டம் மட்டுமிருந்தால் இவளையும் நீ இழந்திருப்பாய். இனிமேல் குழந்தைகளைப் பிரித்து ஆபத்தை விலைக்கு வாங்கிக்கொள்ளாதே. உனக்கும் நல்லகாலம் பிறக்குமா! உன் மனைவியும் தேறுவாளா! என்று கவலைப்பட்டேன். ஏதோ கடவுள் கிருபையால் தேறிவிட்டாள். ஜாக்கிரதையாக பார்த்துக்கொள்ளு" என்று எச்சரிக்கும்போது ஹரிஹரன் முகத்தில் அசடு தட்டியது. தலையைமட்டும் ஆட்டினுன்.

எப்போதுமே ஒரு நல்லது ஏற்பட்டாலும், விபத்து விளைந் தாலும், அந்த அதிர்ச்சியில்—புதிதில்—வேறுவிதமான பிரஸ் தாபமோ, விஷயமோ, சம்பவமோ நடக்காது. அதைப்பற்றியே பேச்சும் சில சமயம் மௌனமும் குடிகொண்டிருப்பது உலக வழக்கம். அதேபோல் நித்யாவின் புனர்ஜென்மத்திற்குப் பிறகு வீட்டில் ஒருவிதமான சந்தடியும் இன்றி வெகு அமைதியாக சில மாதங்கள் கழிந்தன.

ஸுதாவுக்கு தாமோதரனே தினம் பாடம் கற்றுக்கொடுத்து வந்தான். ஸுதா தினேதினே பள்ளிக்கூடத்தில் நல்ல பெயர் எடுப்பதும் நிறைய மார்க்கு வாங்குவதும் காண, நித்யாவின் உள்ளம் பூரித்தது. முன்பெல்லாம் ஸுதா தன் பாட்டியுடன் சேர்ந்து லஞ்சம்வாங்கும் துர்ப்பழக்கம் நித்யாவின் உபதேசத்தினுல் அடியோடு ஒழிந்துவிட்டதோடு பாட்டி வாங்குவதையும் தடுக்க வாரம்பித்தாள்.

தன்னுடைய இயற்கையான சுபாவத்திற்கு விரோதமாக எத்தனை நாளைக்கு குப்பம்மாள் தன் விச்வரூபத்தைக் காட்டா திருக்கமுடியும்? ஒரு சமயம் ஒரு குடியானவன் முக்கியமான நில விஷயமாய் எஜமானைப் பார்க்கவந்தான். அவனை வழி மறித்தான் சாமிபோல் குப்பம்மாளும் யாதவனும் மடக்கிக்கொண்டு "முதலில் பணத்தைக் கீழே வைத்தால்தான் ஐயாவைப் பார்க்கமுடியும். இல்லாவிட்டால் போகலாம்" என்று கண்டிப்பாய்க் கூறினுர்கள்.

குடியானவனே தனக்கு தற்சமயம் மிக்க கஷ்டம் வந்திருப்ப தாயும், காரியம் ஜெயமாகியதும் தான் கட்டாயம் நெல் மூட்டைக ளாகவே தள்ளுவதாயும் சொல்லி வருத்தப்பட்டான். இதை ஸுதா பார்த்துக்கொண்டிருந்து உடனே ஓடி தன்தாயாரிடம் தெரிவித்தாள்.

எங்குமில்லாத குண்டு தைரியத்துடன் நித்யா வீதிக்கு வந்து குடியானவனை நோக்கி, "அப்பா! நீ எஜமானரையா பார்க்கவேண் டும்? நீ ஏன் இந்த பக்கம் வந்து இவர்களிடம் இம்மாதிரி இம்ஸைப்

படவேண்டும்? ஆபீஸில் நேரில் சென்று எஜமானைப்பார்த்து உன் காரியத்தை முடித்துக்கொள்ளப்பா! வீட்டிற்கு வந்தால்தான் இந்த லஞ்சங்கொடுக்கும் உபத்திரவம் உண்டாகிறது...நீ எழுந்து வா; நான் எஜமானரிடம் அழைத்துப் போகிறேன்" என்று கூறியவாறு அவனை வெகு துணிவுடன் அழைத்துக்கொண்டு நேரே ஹரிஹரன் கச்சேரி செய்யும் இடத்திற்குச் சென்றாள்.

என்னே ஆச்சரியம்! குப்பம்மாளை அப்படியே தூக்கிவாரிப் போட்டுவிட்டது. "ஐயையோ அநியாயமே! பாம்புக்குப் பால் வார்த்ததுபோல் ஆகிவிட்டதே. இந்தச் சிறுக்கிக்கு இத்தனை துணிச்சலும், தைரியமும் வந்துவிட்டது. இனிமேல் வீடு உருப்பட்டதுபோலத்தான்.......குடி முழுகிப்போகவேண்டியதுதான்" என்று முணுமுணுத்துக்கொண்டே பின்னாலேயே எழுந்து ஓடினாள். ஸுதா கலகலவென்று சிரிக்கும் சப்தம் கேட்டதும் குப்பம்மாளுக்கு எரியும் அடுப்பில் எண்ணெயை வார்த்ததுபோல் இருந்தது.

ஸுதா சிரிப்பதைக்கண்ட யாதவ் ஒரே ஓட்டமாக ஓடிப்போய், "தடிக்கழுதை! சிரிப்பென்னடீ சிரிப்பு? பேமானி சிரிப்பு. இனிமே இப்படி சிரிக்கமாட்டயே! மாட்டயே" என்று கூறிக்கொண்டே முதுகிலும் கன்னத்திலும் பளாரென்று அடித்தான்.

சிறுமி பாவம் வலி தாங்காது, "ஐயோ! ஐயோ! அண்ணா என்னை அடித்துக் கொன்றுவிடுகிறானே! அம்மா! அம்மா!" என்று அலறியவாறு ஓடிவந்து நித்யாவைக் கட்டிக்கொண்டாள்.

ஸுதாவை அடித்த அடி நித்யாவின் தலைமீது அடிப்பதுபோல் வேதனை செய்ததும் அவள் ஸுதாவைக் கட்டிக்கொண்டு, 'யாதவ்! இதென்ன ராக்ஷஸத்தனம்? சின்ன குழந்தையை இப்படியா அடிப்பது? இது கொஞ்சங்கூட நன்றாயில்லை" என்றாள்.

யாத:—ஆமாம். இது நன்றாயில்லைதான். முன்பின்னறியாத குடியானவத் தடியனை வெகு தைரியத்துடன் இழுத்துக்கொண்டு ஓடுவது வெகு வெகு நன்றாயிருக்கிறது. உன் பவிஷுக்கு வாயைப் பாரு" என்று கூறியதைக் கேட்ட நித்யாவின் கண்கள் சிவந்தன. உதடு துடித்தது...யாதவ்! தன் விரலே தன் கண்ணைக் குத்தினால் விரலை எப்படி வெட்டிப்போடமுடியாதோ அப்படி உன் குற்றத்திற்கு "நான் உன் தாயாகையால் தயையேகாட்டி உன்னை மன்னிக்கிறேன். அநியாயமான வழியில் செல்லாதே...ஜாக்கிரதை" என்று கூறியவாறு சுதாவை ஒரு கையில் பிடித்துக்கொண்டு ஹரிஹரனின் ஆபீஸ் ரூமுக்குக் குடியானவனுடன் சென்றாள்.

# பரிசுகளின் விவரம்

1941-ம் வருஷம் ஜூன் மீ 25-ந் தேதிக்குள் சந்தா அனுப்பியவர்களில் கீழ்க்கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவரவர் பெயருக்கெதிரே குறிப்பிட்டுள்ள தொகையை தபாற்செலவுக்காக மணியார்டர் செய்து, தங்களுக்கு வேண்டிய நமது நாவல்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

| ந. | ரூ. | சந்தா ந. | விலாசம். | போஸ்டேஜ். ரூ. அ. |
|---|---|---|---|---|
| 1. | 20 | A. 610 | Mr. N. Abdul Majeod. 2, Rochere Road, Singapore. | 3 15 |
| 2. | 15 | S. 1594 | ,, R. S. Subbarayalu, North St,, Mulakaraipatti. | 2 1 |
| 3. | 10 | K. 763 | ,, K. P. Kalyanaramasami Iyer, 4, Kondalier St., Madras. | |
| 4. | 5 | S. 1575 | ,, K. M. Sinnayya Pillai, Sinmizwa. (Burma.) | 0 15 |
| 5. | 5 | K. 746 | ,, E. Kadersa Rowther, No. 3, Sheikalmudi Bazar, Hardypet. | 0 14 |
| 6. | 5 | K. 759 | ,, P. Kanagaratnam, 25,Trincomale St.,Kandy. | 0 14 |

## ஸெப்டம்பர் 25-ந் தேதிக்குள்

சேரும் சந்தாநேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப்போட்டு, 6 சீட்டுகளெடுத்து அவற்றிற்கு சென்ற இதழில் குறிப்பிட்ட தொகையுள்ள புத்தகங்கள் கொடுக்கப்படும்.

---

## சந்தாநேயர்களுக்கு ஒரு அபூர்வ சந்தர்ப்பம்

உடனே முந்துங்கள். எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புகிறீர்களோ, அத்தனை எட்டணு விலையுள்ள நாவல்களை இனமாகக் கொடுப்பதுடன் உங்களுடைய நம்பர்களும் சீட்டுக் குலுக்குவதில் சேர்த்துக்கொள்ளப்படும். பணம் அனுப்புகையில் வேண்டிய நாவல்களின் பெயரைத் தெரிவித்து, 8 அணு நாவலுக்கு ஒரு அணு வீதம் (வெளிநாடு 1½ அணு) தபாற்செலவுக்காக சேர்த்தனுப்பவும்.

..................................இங்கே கத்தரிக்கவும்..................................

"ஜகன்மோகினி" மானேஜருக்கு,

இதனுடனிருக்கும் விவரப்படி, புது சந்தாநேய ரை / ர்களை ச் சேர்த்து ரூ...... போஸ்டல்ஆர்டல் கிராஸ்செய்து அனுப்பியிருப்பதைப் பெற்றுக்கொண்டு, நான் குறிப்பிட்டுள்ள இனம் நாவ லை / ல்களை அனுப்புவதுடன், எனது சந்தா நம்பரையும் சீட்டுக் குலுக்குவதில் சேர்த்துக்கொள்ளவும்.

சந்தா. ந: கையொப்பம்.

புது சந்தாநேயரின் விலாசம் :

இனம் நாவல்கள்.

"JAGANMOHINI" Vol. XVIII No. 7 Regd. No. M. 2210.

# ஜகன்மோகினி 18 ஆவது ஆண்டு: 1941

முதல் ஐந்து இதழ்களில் புகழ்மாலை என்ற நாவல் வெளியாயிற்று. ஷை நாவல் ஒரே வால்யூமாக பைண்டு செய்யப்பட்டு ரூ. 1-4-0 க்கு விற்கப்படுகிறது. சஞ்சிகை ரூபமாக வேண்டுவோர் 10 அணாவுக்கு (5 கூபனுக்கு) பெறலாம். புதிதாகச் சந்தா சேர்வோர் ஜனவரியிலிருந்து பிரதிகள் வேண்டுமா அல்லது ஜூன் முதலாவென்பதைத் தெரிவிக்கவும்.

வருஷசந்தா உள்நாடு ரூ. 1-8-0. வெளிநாடு ரூ. 2/- (3 ஷிலிங்.)

---

## ஸ்ரீமதி. வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய **54** நாவல்கள்.

ரூ. 2-8
வைதேகி
ராதாமணி
சாருலோசனா
பத்மசுந்தரன்
காதலின் கனி

ரூ. 2
நவநீதகிருஷ்ணன்
ருக்மிணிகாந்தன்
சாமநாதன்
தியாகக்கொடி
மங்களபாரதி

ரூ. 1-12
சண்பகவிஜயம்
கௌரீமுகுந்தன்
ஸாரமதி

ரூ. 1-8
சோதனையின் கொடுமை
உணர்ச்சி வெள்ளம்
சந்தோஷ மலர்

ரூ. 1-4
பரிமளகேசவன்
உத்தமசீலன்
இன்பஜோதி
ராஜமோஹன்
அனாதைப்பெண்
வானக்குயில்
ஜீவியச்சுழல்
கஸ்தூரீதிலகம்
கானல் நீர்
ஆத்மசக்தி
புகழ்மாலை

ரூ. 1
சுகந்தபுஷ்பம்
சாந்தகுமாரி
மாயப்ரபஞ்சம்
சந்திரமண்டலம்
கருணாலயம்

அணா 14
கோபாலரத்னம்
புத்தியே புதையல்

அணா 12
கதம்பமாலை *

அணா 10
பட்டமோ பட்டம்
மகிழ்ச்சி உதயம்

அணா 8
நளினசேகரன்
வீரவஸந்தா
மூன்று வைரங்கள்
படாடோபத்தின் பரிபவம்
பிச்சைக்காரக் குடும்பம்
ஆனந்தஸாகர்
ப்ரேமப்ரபா
வத்ஸகுமார்
மாலதி
படகோட்டி

அணா 6
பக்ஷமாலிகா

அணா 4
மாதவமணி
ஜெயஸஞ்சீவி
சுகுணபூஷணம்
அம்ருததாரா
அன்பின் சிகரம்
ஸரஸாராஜன் *
உளுத்த இதயம்

---

The J.M.O Motto
USEFUL ENTERTAINMENT
SOCIAL SERVICE & REFORM

ஜகன்மோகினி
ESTD 1923
LEADING PUBLISHERS OF FAMOUS NOVELS

THE JAGANMOHINI OFFICE
JOURNALISTS, PUBLISHERS
BOOKSELLERS & PRINTERS
26. CAR STREET, TRIPLICANE, MADRAS.

JAGANMOHINI
TAMIL MONTHLY
POPULAR THE WORLD OVER WHEREVER TAMIL IS READ

'Phone: 86019.

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, 26, CAR STREET, TRIPLICANE, MADRAS.

ஜகன் மோகினி

# சித்திர ரகளை



183055
600 008

ன்:—அடி